விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 16 வியாழக்கிழமை (01.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 257

## உள்ளக பொறிமுறையை ஐ.நா நம்புகிறது

# எந்த அழுத்தத்தையும் பான் கீ மூன் தரார்!

## இலங்கை அரசு வலுவான நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசாங்கம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகத்திற்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், போர் குற்ற விசாரணைகள் தொடர்பில் சர்வதேசத்தின் தலையீடு இருக்க வேண்டும் என்ற அழுத்தம் முற்றிலும் நீங்கியுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை அரசு, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனும் இந்த விடயத்தில் அழுத்தம் கொடுக்கப் போவதில்லை என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன இந்தத் தகவல்களை முன்வைத்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி நீதிமன்றில் ஆஜர்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியில் வைத்து விலங்கிடப்பட்டு வெள்ளை வானில அழைத்துச் செல்லப்பட்ட முன்

24ஆம் பக்கம் பார்க்க....

## கோத்தாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)


முன்னாள் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவன்ட் கார்ட் பாதுகாப்பு நிறு

24ஆம் பக்கம் பார்க்க....

உள்ளே...
கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை - 2016
மாதிரி வினாத்தாள்

## அலைகடலென திரண்ட பக்தர்கள் நடுவே அலங்காரக் கந்தன் தேரில் பவனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...
கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை - 2016
மாதிரி வினாத்தாள்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசாங்கம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வ தேச சமூகத்திற்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், போர் குற்ற விசாரணைகள் தொடர்பில் சர்வதேசத்தின் தலையீடு இருக்க வேண்டும் என்ற அழுத்தம் முற்றிலும் நீங்கியுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை அரசு, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனும் இந்த விடயத்தில் அழுத்தம் கொடுக்கப் போவதில்லை என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன இந்தத் தகவல்களை முன்வைத்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

# அலைகடலென திரண்ட பக்தர்கள் நடுவே அலங்காரக் கந்தன் தேரில் பவனி



24ஆம் பக்கம் பார்க்க....

# கொழும்பை வந்தடைந்த மூன் பிரதமருடன் நேற்று சந்திப்பு



23ஆம் பக்கம் பார்க்க....

# இராணுவத் தேவைகளுக்குரிய காணிகள் விடுவிக்கப்படாது!

## இராணுவம் மீண்டும் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் அதி உயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள பொது மக்களின காணிகளை விடுவிக்கும் போது தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டே அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என இராணுவம் மீண்டும் அறிவித்துள்ளது.

இதனால் இராணுவ முகாம்களுக்குத் தேவையான காணிகளை தொடர்ந்தும் வைத்துக்கொண்டே ஏனைய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இரா

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமர் இன்று சிங்கப்பூர் பயணம்


(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை சிங்கப்பூருக்குப் பயணம் செய்யவுள்ளார்.

சிங்கப்பூரில் இன்று முதல் இரண்டு நாட்கள் இடம்பெறவுள்ள இந்து சமுத்திர கலந்துரையாடல்-2016 எனும் கருப்பொருளில் இடம்பெறவுள்ள மாநாட்டில் பங்கேற்கவே அவர்

24ஆம் பக்கம் பார்க்க....

## குரல்தரவல்ல அதிகாரி புதிதாக நியமனம்



(கொழும்பு)

படைத்தரப்பின் குரல்தரவல்ல அதிகாரியாக பிரிகேடியர் றொசான் செனிவிரத்ன புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

படைத்தரப்பின் குரல்தரவல்ல அதிகாரியாக பணிபுரிந்த பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர வெளிநாட்டு

24ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ் கைதியை சுட்டுக்கொன்ற முன்.இராணுவ அதிகாரிக்கு சிறை

(கொழும்பு)

தமிழ் கைதி ஒருவர் மீது கவனக குறைவாக துப்பாக்கிச் சூடு நடத்தி, அவரை கொன்றதாக, குற்றச்சாட்டுக்கு உள்ளான முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனை விதித்ததுடன் 20 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டுள்ளது.

விமல் விக்கிரமகே எனும்

24ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீனவர் வலையில் சிக்கிய டொல்பின்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாதகல் கடற்பரப்பில் 7 அடி நீளமான டொல்பின் மீன் தற்செயலாக இறந்த நிலையில் மீனவரின் வலையில் அகப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரி தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை காலை குறித்த மீனவர் மீன் பிடிப்பதற்காக கடலில் வலை வீசியிருந்த போது, அவரின் வலைக்கு இந்த டொல்பின் மீன் அகப்பட்டுள்ளது.

மீனவர் உடனடியாக கடற்படையினருக்கு தகவல் வழங்கியதன் பிரகாரம், கடற்றொழில் நீரியல் வளத் துறையினருக்கு அறிவித்த தன் பின்னர் அதிகாரிகள் அப்பகுதிக்கு சென்று டொல்பினை பெற்றுக்கொண்டுளளனர்.

தொடர்ந்து அந்தப் பகுதியிலே குறித்த டொல்பின் மீன் வெட்டி புதைக்கப்பட்டுள்ளது.

இது சுமார் 7 அடி நீளமான 100 கிலோவிற்கும் அதிகமான எடையுடைய டொல்பின் மீன் என கணக்கிடப்பட்டுள்ளது. (செ-11)


## 50 வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

01.09.2016



### கந்தசாமி மணிவண்ணன்

உணர்வில் கலந்து
உள்ளத்தில் நிறைந்த
உரிமையுள்ள எம் அப்பாவிற்கு
உறவோடும் பாசமெனும்
உணர்வோடும் இணைந்து
உரைக்கின்றோம் உமக்கு
இனிய பிறந்த நாள்
வாழ்த்துக்கள் அப்பா



வாழ்த்துவோர் :- பெற்றோர் - கந்தசாமி மனோன்மணி, மனைவி - கமலவாணி, பிள்ளைகள் - சுஜிபா, லக்ஷன்,சுதர்ஷா, சுஜந்தன், அல்வின், மருமகன் - அஜந்தன், பேரப்பிள்ளைகள் - அஜக்ஷா, சாகித்,சகோதரர்கள் - மணிமாறன், விஜயநிர்மலா, உதயகுமார், பானுரேகா, இந்திரகாசன், நளாயினி, சந்திரகாசன், நித்தியா, சாகித்யன். (C-5591)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி S.குமுதா

யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை தலைவர் கலாநிதி க.சுதாகர் அவர்களின் அன்புச் சகோதரி திருமதி S.குமுதா அவர்கள் 31.08.2016 நேற்று புதன்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5784)

புவியியற் கழகம், புவியியல் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## அறிவித்தல்

### பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்
### மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
### வடக்கு மாகாணம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016

தமிழ்/சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.09.30 ஆகும்.

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk** ⇨ **Recruitment and Exam** ⇨ **Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ரூ.வரதலிங்கம்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம். (C-5593)

## கண்ணீர் அஞ்சலி



### தங்கராசா செந்வரன்

(வைத்தியர் - யாழ் போதனா வைத்தியசாலை)

தங்கராசா - சந்திராதேவி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன் வைத்தியர் தங்கராசா செந்வரன் அவர்களது அகால மரணச் செய்தி அறிந்து ஆற்றொணாத் துயருறுகின்றோம்

அன்னாரின் பிரிவால் கலங்கி நிற்கும் அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குபற்றுவதுடன் அவரின் மனைவி, பிள்ளை, பெற்றோர், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்



அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

பொ.இந்திரன் குடும்பத்தினர்

பிறதர் கொங்கிறீட், கொடிகாமம் வீதி, கோவிற்சந்தை, கரவெட்டி. (C-5594)

## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு பிரசாந்தி



ஆழியவளையைப் பிறப்பிடமாகவும், எல்லை ஒழுங்கை கற்கோவளம் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு பிரசாந்தி நேற்று (31.08.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வெற்றிவேலு - இந்திராதேவி தம்பதியரின் அன்புமகளும், கலாநிதி, பிரமிளா, வசந்தராஜ், சர்மிளா, வசந்தகுமார், ஆகியோரின் அன்புச்சகோதரியும் அன்ரனி நிக்சன், ரகுநாதன், ஆகியோரின் அன்பு மைத்துனியும் தளிர், பூமி ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2016) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எல்லை ஒழுங்கை,
கற்கோவளம்,
பருத்தித்துறை.

தகவல் -
குடும்பத்தினர்
077 899 5685 / 021 205 6096

(C-5596)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு வருடங்களில் 323 பேர் புகையிரத விபத்துக்களில் பலி!

(கொழும்பு)

கடந்த இரண்டு வருடங்களில் புகையிரதங்களில் மோதுண்டு 323 பேர் பலியாகியிருப்பதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு 148 பேரும். 2015 ஆம் ஆண்டு 175 பேரும் புகையிரதங்களில் மோதுண்டு பலியாகியுள்ளதாகவும். இதில் அதிகமானோர் புகையிரதங்களின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் 303 பேர் தற்கொலை செய்துள்ளதாகவும்.500 பேர் தற்கொலைக்கு முயன்று காயங்களுடன் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் புகையிரத திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதே வேளை புகையிரதபாதைகளில் நடந்து செல்வோரின் கவனமின்மையால் அதிகமரணங்கள் சம்பவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும். சட்டவிரோதமாக புகையிரத பாதைகளை பயன்படுத்துபவர்கள் 1851 நபர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும். இதன் மூலம் 6,592,759 ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் புகையிரத திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-7-10)



கேலிச்சித்திரம்

# இலங்கையில் பெறுமதிமிக்க பாடங்களைக் கற்றேன்

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ஏற்பாட்டாளராக செயற்பட்டபோது பெறுமதிமிக்க பாடங்களைக் கற்றுக்கொண்டதாக நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

1998ஆம் ஆண்டில் இருந்து 2005ஆம்ஆண்டுவரை சொல்ஹெய்ம் இலங்கையின் சமாதான ஏற்பாட்டாளராக செயற்பட்டு வந்தார். தம்மைப் பொறுத்தவரை. இணக்கத்துக்கு வராத அரசியல் தலைவர்கள். கொரில்லா தலைவர்கள் அல்லது பயங்கரவாதத் தலைவர்களுடன் தொடர்ந்தும் பேச வேண்டும் அதனைத் தொடர்ந்தும் மேற்கொள்ளமுயற்சிக்கவேண்டும் என்று சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிறுவன தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (இ-7-10)

# கொழும்பினூடான மனிதக் கடத்தலை கட்டுப்படுத்த உதவி கோரும் நேபாளம்

(கொழும்பு)

நேபாளத்தில் உள்ள பெண்களை கடத்துவதை தடை செய்ய இலங்கை ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என நேபாளம் உதவிகோரியுள்ளதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பின் ஊடாக சட்டவிரோதமாக மனிதக் கடத்தலை தடுப்பதற்கு இலங்கை பொலிஸார் ஒத்துழைப்பை வழங்கவேண்டும்என நேபாளத்தின் சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர்சர்வேந்திர கனல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில்22 பெண்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக நேபாள பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே கடந்த ஜூன் மாதத்தில் இருந்து தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நேபாளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேபாளம் பெண்களை கடத்துவதற்கு பயன்படுத்தப்படும் காத்மண்டு - டில்லி மற்றும் மும்பை - கொழும்பு ஆகிய பாதைகள் தற்போது அம்பலமாகியுள்ளதாக அந்நாட்டு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு கடத்தப்பட்ட நேபாள பெண்களை இலங்கை பொலிஸாரின் உதவியுடன் மீட்டுள்ளதாக நேபாள அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேபாள பெண் தொழிலாளர்களை பெரும்பாலும் மலேசியா மற்றும் பிற நாடுகளுக்கு நாட்டியக்காரர்களாக, பணிப்பெண்களாகவே வேலைக்கு அமர்த்த கடத்தி செல்லப்படுகின்றார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் இருந்து ஒகஸ்ட் முதல் வாரத்தில் கிட்டத்தட்ட 19 பெண்களை மீட்டுள்ளதாகவும் நேபாளத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(இ-7-10)

# வர்த்தகர் கொலையுடன் தொடர்புடைய இருவர் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹமட் சுலைமான் சகீப் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களது புகைப்படங்கள் இரண்டு தற்போது குற்றப் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கேகாலையில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து வர்த்தகரின் தந்தைக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு கப்பம் கோரியவர்கள் இவர்களே என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபர்களை கைது செய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்காக பொதுமக்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது. சந்தேகநபர்களின் புகைப்படங்களை ஊடகங்கள் வாயிலாக வெளியிட பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை வர்த்தகரின் கடத்தல் மற்றும் கொலை தொடர்பாக இது வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கை பிரதமருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7-10)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐ.தே.க.தனித்துப் போட்டியிடும்

## அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த உள்ளூராட்சி சபை தேர்தலில் தனித்து போட்டியிடவே தீர்மானித்துள்ளதாகவும் அதற்கான கட்சி மட்ட பேச்சுவார்த்தைகளே தற்போது மேற்கொள்ளப்படுவதாக அரச தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.



அடுத்த உள்ளூராட்சி சபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்பன இணைந்து செயற்படுவது தொடர்பில் எந்தவொரு தீர்மானங்களோ பேச்சுவார்த்தைகளோ கட்சிகள் மத்தியில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவை அனைத்தும் வெறும் கட்டுக்கதைகளே எனவும் தெரிவித்தார்.

உலக வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி. ஐக்கிய தேசிய முன்னணியாக தேர்தலில் போட்டியிட்டிருந்தது. ஆனாலும் இம்முறை தனித்துப் போட்டியிடுவதற்கான கலந்துதரையாடல்களே கட்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐக்கிய தேசிய கட்சி வேறு எந்தவொரு கட்சியுடனும் தேர்தல் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லை என்பதை கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் என்னால் உறுதியாக கூற முடியும். தற்போது வரையில் ஐக்கிய தேசிய கட்சியாக போட்டியிடவே நாம் தீர்மானித்துள்ளோம். அதற்கான கட்சி மட்ட பேச்சுவார்த்தைகளே தற்போது மேற்கொள்ளப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## 500 கோடி ரூபா செலவில்

# இந்திய நிறுவனத்திடமிருந்து 500 பேருந்துகள் கொள்வனவு

## அமைச்சர் நிமால் தகவல்



(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்து சபைக்காக இந்திய நிறுவனம் ஒன்றிலிருந்து 500 பேருந்துகள் கொள்வனவு செய்வதற்கு போக்குவரத்து அமைச்சர் நிமால் ஸ்ரீபால டீ சில்வா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்கள் இரண்டின் ஊடாக குறித்த பேருந்துகளை சிறிது சிறிதாக கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் எனினும் அது இதுவரை சாத்தியப்படாததால் அமைச்சர் குறித்த பேருந்துகளை ஒரே சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்ய முன்வந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வரும் இலங்கை போக்குவரத்து சபையின் பணியாளர்களது ஈ.பீ.எப் மற்றும் ஈ.டீ.எப் பணங்கள் உள்ளிட்டவை செலுத்தாமல் நிலுவையில் கிடக்கும் நிலையில் இவ்வாறு 500 கோடி ரூபாய் செலவில் பேருந்துகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை. தன்னால் முன்னெடுக்கப்பட்டுள்ள பேருந்துக் கொள்வனவுக்கு எவரேனும் எதிர்ப்பை வெளியிட்டால் தான் அமைச்சுப் பதவியை துறக்கவுள்ளதாகவும் அமைச்சர் நிமால் ஸ்ரீபாலடிசில்வா தெரிவித்திருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையை வீழ்த்தி தொடரை வென்றது ஆஸி

இலங்கை அணிக்கு எதிரான 4-வது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான 4-வது ஒருநாள் போட்டி தம்புள்ளையில் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக தனஞ்ஜெய டி சில்வா, பெர்னாண்டோ ஆகியோர் களமிறங்கினார்கள்.

பெர்னாண்டோ டக்- அவுட் ஆகி அதிர்ச்சி அளித்தார். இதைத் தொடர்ந்து வந்த குஷல் மெண்டிஸ் (1), சண்டிமல் (5) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

அணித்தலைவர் மத்யூஸ் (40) சிறப்பாக விளையாடி வந்த நிலையில், பந்து தலையில தாக்கி வெளியேறினார்.

மறுமுனையில் நிதானமாக ஆடி வந்த தனஞ்ஜெய டி சில்வா (76) அரைசதம் கடந்து ஆட்டமிழந்தார். இதன் பின்னர் வந்தவர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.இதனால் இலங்கை அணி 50 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 212 ஓட்டங்களை எடுத்தது.

அவுஸ்திரேலியா அணி சார்பில் ஜோன் ஹேஸ்டிங்ஸ் 45 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.



இதன் பின்னர் 213 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்க வீரர் வோர்னர் (19) நிலைக்கவில்லை.

மற்றொரு தொடக்க வீரரான ஆரோன் பின்ச் (55) 19 பந்தில் அரைசதம் அடித்தார். கவஜா டக்- அவுட் ஆனார்.

டிராவிஸ் 40 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க, பெய்லி நிதானமாக ஆடி அரைசதம் அடித்தார். இதனால் அவுஸ்திரேலியா 31 ஓவரிலேயே 4 விக்கெட் மட்டும் இழந்து 217 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த ஜோர்ஜ் பெய்லி 85 பந்தில் 90 ஓட்டங்கள் எடுத்தார்.இந்த வெற்றியின் மூலம் 5 ஒருநாள போட்டிகள் கொண்ட தொடரை அவுஸ்திரேலியா 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.(க)

# செல்வச் சந்நிதி இன்று கொடியேற்றம்

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினாறு தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 10-ம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு பூங்காவனத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு கைலாச வாகனத்திருவிழாவும் 14-ம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறமும் மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்த திருவிழாவும் அன்று மாலை 5 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-60)

## ஐ.நா செயலரின் கவனத்தை ஈர்க்க

# யாழ்.மாவட்ட செயலக முன்றலில் நாளை கவனயீர்ப்பு போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

நாளை 2-ம் திகதி யாழ் வருகை தரவுள்ள ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் சர்வதேச ரீதியிலான நீதி விசாரணையை வலியுறுத்தியும் நாளை நண்பகல் 12 மணியளவில் யாழ் மாவட்டச் செயலக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் எஸ். சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார்

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை வழங்கல, காணாமல் போனவர்கள் தொடர்பில் உண்மை நிலையை வெளிப்படுத்தல், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தல, காணி அபகரிப்பை நிறுத்துதல, தமிழருக்குரிய அரசியல் தீர்வை விரைந்து வழங்க வேண்டும் என பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து எமது நிலையை தெரியப்படுத்தி ஐ.நா செயலாளரின் கவனத்துக்கு அதனை கொண்டுவரும் வகையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாக அறிவித்துள்ள சிவாஜிலிங்கம், மேற்படி போராட்டத்தில் அனைவரும கலந்து கொண்டு தமது ஒத்துழைப்பை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-9)

# பல்கலை மாணவர்களின் பேரணி மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம்

அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்த பாரிய ஆர்ப்பாட்ட பேரணி மீது பொலிஸார் கண்ணீரபபுகை மற்றும் நீர்த்தாரை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மாலபேயில் இயங்கிவரும் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராகவும் பல்கலைகழகத்திற்குள் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்ட பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஜெயவர்த்தனபுர பல்கலைகழகத்தில் நேற்று முற்பகல் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்ட பேரணி மீது கொள்ளுப்பிட்டி பகுதியில் வைத்து பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவை மீறி உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசிக்க முயற்சித்ததை அடுத்து ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்ட மாணவர்களை தடுக்கும் வகையில் பொலிஸாரால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றிருந்ததுடன், ஆர்ப்பாட்ட பேரணி காரணமாக கொள்ளுப்பிட்டி பகுதியில் கடும் வாகன நெரிசல ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(செ-11)



# இலங்கை பொலிஸ் திணைக்களம் இனி 'இலங்கை பொலிஸ்' ஆகிறது

இலங்கை பொலிஸ் திணைக்களமானது "இலங்கை பொலிஸ்" என இனிவரும் காலங்களில் அழைக்கப்படுவது தொடர்பிலான யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம வழங்கியுள்ளது.

கொழும்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவையின் இணைபேச்சாளர் கயந்த கருணாதிலக்க இவவாறு தெரிவித்தார்.

இலங்கை பொலிஸானது பல்வேறு யுகங்களிலும் ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் பல்வேறுபட்ட பெயர்களை கொண்டு அழைக்கப்பட்டது.

1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச்சட்டம் மற்றும் பொலிஸ் திணைக்கள கட்டளையின் கீழ் பொலிஸானது "இலங்கை பொலிஸ் படையணி" என அழைக்கப்படுவதுடன், 1945 ஆண்டின் பின்னர "இலங்கை பொலிஸ் திணைக்களம்" என அழைக் கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு முதல் பொலிஸ் திணைக்களமானது "இலங்கை பொலிஸ்சேவை" என அழைக்கப்படுகின்றது.

இந்நிலையில் நீண்ட வரலாற்றினைக் கொண்ட இலங்கை பொலிஸ் திணைக்களமானது தமது 150 ஆம ஆண்டு நிறைவினை கொண்டாடுகின்ற நிலையில் இலங்கை பொலிஸ் திணைக் களத்தை அழைப்பதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயராக "இலங்கை பொலிஸ்" என இனி வரும் காலங்களில் அழைக்கப்படுமென சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க அறிவித்துள்ளார். (செ-11)


கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 18 . 01 . 1934

அமரர் கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை

விண்ணில் 29 . 08 . 2016

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் ஆசிரியர் திரு. கோ. பரணிதரனின் பாசமிகு தந்தை அமரர் கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை காலமான செய்தி அறிந்து பாடசாலைச் சமூகம் துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரிச் சமூகம்



கண்ணீர் அஞ்சலி



தங்கராசா செங்வரன்

(வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை)

யாழ் போதனா வைத்தியசாலையில் சேவை புரியும் வைத்தியர் **தங்கராசா செந்வரன்** அவர்களது திடீர் மரணச்செய்தி அறிந்து மனம் கலங்கி நிற்கின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.



ஓம் சாந்தி!

அம்பாள் தொலைத் தொடர்பகம், மந்திகை சிலையடி, மந்திகை.

சி.செல்வராசா குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லைக் கந்தனைத் தேரிலே காண
# அலையெனத்திரண்ட அடியவர் கூட்டம்








அலைபோல் திரண்ட பக்தர்களின் பங்கேற்புடன் வரலாற்று சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த தேர்த்திரு விழா நேற்று நடைபெற்றது. பக்தர்கள் காவடி எடுத்தும் அங்கப் பிரதட்சணை செய்தும் கர்ப்பூரச்சட்டி ஏந்தியும் தமது நேர்த்திக் கடன் களை நிறைவேற்றினர். பக்தர்களின் அரோகரா கோஷம் வானைப் பிளக்க முருகப்பெருமான் தேரில் காலை 7.15 மணிக்கு எழுந்தருளி 9.40 மணிக்கு இருப்பிடத்திற்கு வந்தார். (படங்கள்:-உ.சாளின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மரபுரிமை கலாசார போட்டிகளும் கண்காட்சி நிகழ்வும் கடந்த 28,29,30 ஆம் திகதிகளில் காலை 6மணி தொடக்கம் இரவு 9மணிவரை சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தில் (சார்மீகன் இல்லம்) நடைபெற்றது.

இளைய சக்தியின் ஆணிவேர் அறிவியல் சஞ்சிகை வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மரபுரிமைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் சிறார்களுக்கான மரபுரிமை கலாசார போட்டிகள் நடைபெற்று வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (படங்கள்:-பொ.சோபிகா)

# நல்லைக்கந்தன் திருவிழாவுக்கு ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து




நல்லூர்க் கந்தனின் தேர்த் திருவிழாவுக்கு ஜனாதிபதியும் பிரதமரும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

நம்நாட்டின் பிரசித்தி பெற்ற இந்து சமய வழிபாட்டுத் தலங்களில் நல்லூர் கந்தசுவாமி திருத்தலம் முதன்மையானதாகும்.

உலகவாழ் இந்துக்கள் மிகுந்த பயபக்தியோடும் சிறப போடும் அனுஷ்டித்து வரும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருவிழாவானது. இந்துப் பக்தர்களின் ஆன்மீக வழிபாட்டினதும் கலாசாரத் தினதும் மிகச்சிறந்தவெளிப்பாடாகும்

இந்துக்கள் மாத்திரமல்லாது தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் சிங்கள பௌத்த மக்களும் அதே போல ஏனைய சமயத்தவர்களும் தவறாது நல்லூர் கந்தனை வணங்கி ஆசிபெறுவது நல்லூர் கந்தனின் சிறப்பை மேலும் பறைசாற்றி நிற்கின்றது.

'நல்லூர் கந்தனின் திருவிழாவைக் காண்பது ஒரு கண்கொள்ளாக் காட்சி எனக் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இவ்வாறு ஏராளமான சிறப்புக்களைக் கொண்ட நல்லூர்க் கந்தனின் திருவிழா சிறப்பான முறையில் இடம்பெறவும் பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறவும் எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் தேர்த்திருவிழா இந்துக்களின் தெய்வபக்தியை வெளிப்படுத்தும் முக்கிய வைபவமாகத் திகழ்கின்றது. மிகுந்த இறை நம்பிக்கையுடன் இதில் பங்குபற்றும் அனைவருக்கும் இந்நிகழ்வு இறை பக்தியின் முக்கிய படிநிலையாகக் காணப்படுகின்றது. இலங்கை அனைத்து சமூகங்களுக்கு மத்தியிலும் சிறப்பான உறவுகள் வலுப்பெற புதியதோர் அத்தியாயத்தில் அடியெடுத்து வைக்கின்றது.

உண்மையிலேயே அனைத்துச் சமூகங்களுக்கும் எந்தவிதமான தடையுமின்றி தமது சமய ரீதியான சடங்குகளையும் சமூக ரீதியான செயற்பாடுகளையும் மேற்கொள்ளக் கிடைத்த வாய்ப்பைக் கொண்டாடி உறுதிப்படுத்தும் சந்தர்ப்பம் இதுவாகும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# விநாயக சதுர்த்தி விரதமும் ஐராவத யானை பவனியும்

(யாழ்ப்பாணம்)

வீணாகான குருபீட விநாயக சதுர்த்தி விரதமும் ஐராவத யானை பவனியும் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3 மணி முதல் சிவதரிசனத்துடன் வீணாகான குருபீடத்திலிருந்து ஆரம்பமாகி வடக்கம்பரை அம்மன் ஆலயத்தில் நிறைவடையவுள்ளது.

கைலைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அருளாசியினை வீணாகான குருமுதல்வர்கள் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினராக ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக பிரம்மஶ்ரீ சுந்தரராஜ சர்மா, சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# மஹோற்சவம் நாளை ஆரம்பம்



தெல்லிப்பழை ஶ்ரீ துர்க்கா தேவி ஆலய மஹோற்சவம் நாளை 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-3)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை, நீராவியடி ஶ்ரீ நடேசப் பெருமான் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.04 மணி முதல் நடைபெறவுள்ளது. (இ-3)

# இலங்கை - இந்திய பாலத்திற்கான அடித்தளம் மகிந்த அரசிலிடப்பட்டது

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பாலத்திற்கான அடித்தளம் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய அரசாங்கத்தால் இடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எட்வட் குணசேகர தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

அரசாங்கம் இந்தியாவுடன் பாரியளவிலான உடன்படிக்கை செய்துகொள்ளவுள்ளதாக எதிர்த்தரப்பினர் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டு வருகின்றனர். எதிர்த்தரப்பினர் அடிப்படையில்லாது அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விமல் வீரவன்ச அமைச்சின் கீழுள்ள திணைக்களம் ஒன்றினால் வெளியிடப்பட்டுள்ள யோசனையில் இலங்கை-இந்திய தொடர்பிலான உறவுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் வீதி, புகையிரத வீதி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது . மேலும் ஆசியாவின் அதிவேக நெடுஞ்சாலை பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனுடன் தொடர்புடைய திணைக்களங்களாக முதலீட்டு சபையும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் பொறுப்பாக்கப்படவுள்ளதாகவும் அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மீது வீண் பழியினை சுமத்தி அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் மத்தியில் இடைவெளியை ஏற்படுத்துவதற்கே எதிர்த்தரப்பினர் முயற்சிக்கின்றனர். எனினும் அவர்களின் முயற்சி கைகூடப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# யாழ். பல்கலை. மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்




(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்கள் 11 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

புலம் பெயர் உறவுகளின் அன்பளிப்பில் பெறப்பட்ட இந்த துவிச்சக்கரவண்டிகளை முதலமைச்சர் மாணவர்களுக்கு வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம். முதலமைச்சர். அமைச்சின் செயலாளர்கள். வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம். பல்கலைகழக மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# பொதுக்கூட்டம்

இலங்கை தொழில்துறை சங்கத்தின் 25 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று முதலாம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் கொழும்பு-2 ஜூனியன் பிளேசில் அமைந்துள்ள ஹில்ரன் வதிவிடத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கலந்துகொள்வார். (இ-3)

# மதிய போசன விருந்து

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி யா/வட்டு இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் மதிய போசன விருந்து நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 3 மணிவரை கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்லூரி அபிவிருத்தி நிதிய ஸ்தாபகர் எஸ்.திருஞானசம்பந்தன், திருமதி விஜயலக்சுமி தம்பதியினர் பிர்தம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# 32ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீட வழிபாட்டு மன்றத்தின் 32 ஆவது ஆண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8மணியளவில் விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலில் புதிய கூட்டணியில் போட்டி

## பசில் ராஜபக்ஷ தகவல்

(கொழும்பு)

**எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புதிய கூட்டணியொன்றை உருவாக்கி, புதிய சின்னத்தில் போட்டியிடப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கடந்த ஆட்சிக்காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ அவரது அமைச்சின் கீழ் இருந்த திவிநெகும நிதியத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுடன் தொடர்புபட்டுள்ளதாக குற்றம்சாட்டி தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்காக நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் முன்னிலையான நிலையிலேயே அவர் ஊடகங்களுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

திவிநெகும நிதியத்திற்குரிய 33 மில்லியன் ரூபா நிதியை முறைகேடாக பயன்படுத்தி கூரைத்தகடு கொள்வனவு செய்ததாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள பசில் ராஜபக்ஷ உட்பட நான்கு பேர் கொழும்பு மேல் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இவர்களுக்கு எதிராக எதிர்வரும் ஒக்டோபர் 19 ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என அரச சட்டத்தரணி நீதிமன்றில் அறிவித்தார்.

இந்த நிலையில் நீதிமன்றத்திற்கு வெளியே வந்த பசில் ராஜபக்ஷ, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புதிய கூட்டணி சார்பில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்தார்.

புதிய கூட்டணிக்கான சின்னம் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் காலம் வரும் போது அது பகிரங்கப்படுத்தப்படும் என்றும் பசில் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து மகிந்த விசுவாசிகளை பதவிகளிலிருந்து அகற்றும் நடவடிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்க மறுத்த பசில் ராஜபக்ஷ எதிர்வரும் நான்காம் திகதி குருநாகலில் நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சியின் 65 ஆவது மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.(இ-7-10)

## தடை செய்யப்பட்ட கிருமிநாசினி தூள்களாக சந்தையில் விற்பனை

ரஜரட்ட உள்ளிட்ட உலர் வலயப் பகுதிகளில் பரவியுள்ள சிறுநீரக பிரச்சினைக்கு நேரடியாகத் தொடர்புபட்டுள்ள க்லய்போசேட் கிருமிநாசினி திரவம் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தடை விதிக்கப்பட்ட பின்னரும் தூள்களாக பக்கெற்றில் அடைக்கப்பட்டு அவை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் இருந்து இலங்கையின் வட பகுதிக்கு கடல் மார்க்கமாக இவை கொண்டு வரப்பட்டு சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதாக, ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர் ஜயசுமன தெரிவித்தார். (இ-7-10)

## கிராம சேவையாளர் போட்டிப்பரீட்சை-2016
### பொது அறிவும் நுண்ணறிவும் விடைகள்
### தொகுப்பு:-P.உமாசங்கர் M.com மருதானை தொழில்நுட்பக் கல்லூரி கொழும்பு - 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 4 | 11) | 4 | 21) | தொழிலாளர் பாதுகாப்பு வேலைத்திட்டம் (சிரமிக்க-சுரமிக்க |
| 2) | 2 | 12) | 4 | 22) | 1972 |
| 3) | 2 | 13) | 4 | 23) | பூகோள வெப்பமடைதல் தொடர்பான மாநாடு |
| 4) | 4 | 14) | 1 | 24) | நைஜீரியா |
| 5) | 2 | 15) | 1 | 25) | ஜப்பான் |
| 6) | 2 | 16) | 3 | 26) | எட்வேட்ஸ் பான்ஸ் |
| 7) | 4 | 17) | 2 | 27) | கண்டி |
| 8) | 3 | 18) | 4 | 28) | பூகோளம் வெப்பமடைதல் |
| 9) | 2 | 19) | 1 | 29) | கிறீஸ் |
| 10) | 2 | 20) | 4 | 30) | தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகளுக்கான அமைச்சு |

பகுதி-II

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 4 | 9) | B(1) | 17) | 2 |
| 2) | 1 | 10) | C(4) | 18) | 4 |
| 3) | 4 | 11) | 2 | 19) | 3 |
| 4) | 3 | 12) | 4 | 20) | 2 |
| 5) | 2 | 13) | 2 | 21) | 4 |
| 6) | 3 | 14) | 1 | 22) | 3 |
| 7) | 4 | 15) | 2 | 23) | 1 |
| 8) | A(3) | 16) | 3 | | |


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா:16
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/6228

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 18
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: B/6229

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 11சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:NDT, HNDQS, Eng/அரசதொழில்
தொ.இ: B/6230

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 58செவ் 4 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் குடியுரிமை
தொ.இ: B/6231

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 38
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்
தொ.இ: G/6265

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 65செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6266

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 41செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்
தொ.இ: G/6268

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 42செவ் 1 இல்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/6274

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai iaffna@gmail com
021 720 1005,021 221 5434
[illegible]


## இராசி பலன்

01.09.2016
(ஆவணி 16, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
அமாவாசை பிற்பகல் 3.06 மணிவரை
மகம் பிற்பகல் 12.14 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 01.35-3.05 மணிவரை
நல்லூர்க்கந்தன் தீர்த்தம்,
செல்வச்சந்நிதி முருகன் கொடி
அமாவாசை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம்,திருவோணம் | | |
| | | | ராகு சூரி சந் புத |
| | சனி செவ் | | குரு சுக் |

**மேடம்:** தொட்ட காரியம் கைகூடும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும்.

**மிதுனம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பயணங்களால் பலனுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், திடீர்ப் பயணங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**கன்னி:** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுப நிகழ்வுகளுக்காக சில செலவுகள் ஏற்படலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள்.

**துலாம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பாராத வருமானங்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடிவரலாம், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் நாள்.

**தனுசு:** தேக நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பாராத பயணங்கள் ஏற்படலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மகரம்:** எந்தக் காரியத்தையும் பல முறை யோசித்துச் செய்வது நல்லது, உடல் ரீதியான உபா தைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கும்பம்:** குடும்பத்தினரிடையே அந் யோன்னியம் அதிகரிக்கும் புதிய தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடிவரலாம் வழிபாட்டில் ஆர்வம் காட்டு வீர்கள்.

**மீனம்:** எங்களின் திறமைகளை மற்ற வர்கள் பாராட்டுவார்கள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், நல்லவர்களின் தொடர்பாடல் நலம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் காணிகளை கடற்படைக்கு வழங்க அளவீடு செய்யும் செயற்பாடு நல்லிணக்கம் அல்ல

## வன்மையாகக் கண்டிக்கிறார் சாந்தி எம்.பி.

( மல்லாவி)

வட்டுவாகலில் பொது மக்களுடைய காணிகளை. கடற்படைக்கு வழங்க அளவீடு செய்யும் செயற்பாடு நல்லிணக்கம் அல்ல என சாந்தி எம்.பி தெரிவித்தார்.

இவ் விடயம் பற்றி அவர் தெரிவித்துள்ளதாவது.

"முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் வட்டுவாகல் பகுதியில் மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி. மீண்டும் கடற்படையினரின் தேவைக்காக 617 ஏக்கர் பொது மக்களின் காணியை சுவீகரிப்பதற்காக காணி அளவீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளமையானது. தமிழ் மக்களினதும் உரிமைகளை வலிந்து பறிக்கும் செயற்பாடாகும். வட்டுவாகல் பகுதியில்கடற்படையினரின்தேவைகளுக்காக கடந்த 3 ஆம் திகதி காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்து. தமது காணிகளை விடுவிக்கக் கோரியிருந்த போதிலும், மீளவும் இன்று காணி அளவீடு இடம்பெறவுள்ளது.

தேசிய பாதுகாப்பை காரணங்காட்டி. ஆயிரக்கணக்கான பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினராலும் கடற்படையினராலும் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் வட்டுவாகல் பகுதியில் 617 ஏக்கர் காணிகளை கையகப்படுத்தும் முயற்சியில் கடற்படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். இதனை நாம் வன்மையாக கண்டிக்



கின்றோம்.

எமது மக்கள் பல்வேறுபட்ட துன்பங்களின் மத்தியில் வாழ்ந்துவரும் இவ் வேளையில், படையினரின் தேவைகளுக்காக எமது மக்களின் காணிகளை தொடர்ந்து ஆக்கிரமித்து வருகின்றமையால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

மீள் குடியேற்றப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்துள்ள இந்த நிலையில் எமது மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாதவாறும் இயல்பு வாழ்க்கை வாழ முடியாதவாறும் இராணுவம் தொடர்ந்து முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது.

எனவே, எமது மக்களின் காணிகள் மீளவும் அளவிட்டு சுவீகரிக்கும் செயற்பாடு கண்டிக்கத்தக்கதாகும்

எமது மக்கள் தமது வாழ்வாதாரமாக விவசாயத்தையும் மீன்பிடியையும் நம்பி வாழ்பவர்கள்.·இவர்களினுடைய காணிகளை பறிப்பதனூடாக ஏற்கனவே யுத்தத்தில் பேரிழப்பை சந்தித்து நலிவடைந்துள்ள எமது மக்களின் வாழ்வாதாரம் மீளவும் பாதிக்கப்படும்.

எமது மக்களின் காணிகளை இராணுவத்தினருக்கும் கடற்படையினருக்கும் வழங்க நாம் இடங்கொடுக்க மாட்டோம் எனத் தெரிவித்துள்ளார். (2-15)

# நீதிமன்ற அபராதம்

( மல்லாவி)

கிளிநொச்சி பகுதியில் பதினைந்து போத்தல் கசிப்பு வைத்திருந்தவருக்கு அறுபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஐந்து வருடங்களிற்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கால சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் பதினைந்து போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் ஏற்கனவே கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது குறித்த குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புபட்ட நபர் சுற்றவாளி என தெரிவித்ததையடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் விளக்கத்திற்காக கடந்த 29 ஆம் திகதி தவணையிடப்பட்டதையடுத்து கடந்த 29ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் மீண்டும் ஆஜர்படுத்திய போது குறித்த நபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து ஆறுபதாயிரம் ரூபா விதிக்கப்பட்டதுடன் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கால.சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (2-15)

# ஒட்டறுத்தகுளம் சந்தியிலிருந்து பாலிநகர் வரையிலான வீதி படுமோசம்

## இலகுவாக பயணிக்க வழிசெய்யுங்கள்

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு ஒட்டறுத்தகுளம் சந்தியிலிருந்து பாலிநகர் வுரைக்குமான வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுவதனால் இதனூடாக பயணிக்கும் போது பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகபொதுமக்கள்கவலை தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு ஒட்டறத்தகுளம் சந்தியிலிருந்து பாலிநகர் வரைக்குமான பிரதான வீதி கடந்த மீள் குடியமர்வையடுத்து 2011, 2012ஆம் ஆண்டு பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்ட நிலையில் குறித்த வீதி கடந்த நான்கு வருடங்களில் மக்கள் பயணிக்க முடியாத அளவில் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது.

இவ்வாறு குறித்த வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளமையால் இதனை அன்றாடம் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள் பொது மக்கள், நோயாளர்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே குறித்த வீதியை புனரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# ஆட்டோ விபத்து



முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாண்ட் மாஸ்டருடன் ஆட்டோ மோதுண்டு தடம் புரண்டது.

இச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் இடம் பெற்றது.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாண்ட் மாஸ்ரருடன் மோதுண்டு ஆட்டோ தடம் புரண்டது

தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படாத போது ஆட்டோ பலத்த சேதம் அடைந்துள்ளது. (2-310)



யாழ்.எயிட் நிறுவனத்தின் ஊடாக கற்சிலை மடுவின் குழந்தைகள் நிலையத்திற்கு ஜேர்மனி வாழ் புலம் பெயர்ந்துவாழும் பாலசிங்கம் குடும்பத்த வர்களின் அனுசரணையில் போரினால் பாதிக் கப்பட்ட பொருளாதார வசதி குறைந்த மாணவர்கள் தங்கி கல்விகற்கும் குழந்தைகள் இல்லத்திற்கு அறுசுவைவணவும் கற்றல் மேம்பாட்டிற்கான உதவிப் பொருட்களும் மாணவர்களின் ஊட்டச்சத்து மேம்பாட்டிற்கான நல்லின பசுக்கன்றும் மற்றும் முன்னாள் போராளிகளுக்கான சுயதொழில் மேம் பாட்டிற்கான ஒரு தொகைப் பணம் என்பன அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்:- அரானி செய்தியாளர்)

## ஆனைவிழுந்தான் கிராம மக்களுக்கு

# வயற்காணிகளை பகிர்ந்தளிப்பதற்கு நடைபெற்ற முன்னோடி கலந்துரையாடல்



( பரந்தன் )

கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனைவிழுந்தான் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கின்ற மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை வழங்கும் வகையில் வயற்காணிகளை பகிர்ந்தளிப்பதற்கான முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று ஆனைவிழுந்தான் குளத்தருகே கிராம அலுவலர் சயந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

1983 இல் வன்செயல் காரணமாக தென்பகுதியிலிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் கிளிநொச்சி ஆனை விழுந்தான் பகுதியில் குடியமர்த்தப்பட்டனர்.

அவ்வாறு குடியமர்த்தப்பட்ட மக்கள் நாளாந்த கூலிகளாக கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக வறுமையோடு போராடி வருகிறார்கள்.

அவர்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்துவதற்காக வயற்காணிகளை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது.

அண்மைக்காலத்தில் ஆனைவிழுந்தான் கிராமிய அமைப்புக்கள் விடுத்த [illegible] பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நடைபெற்ற கூட்டத்தில் உரிய அதிகாரிகளோடு கலந்து கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தார்.

அங்கு உரைநிகழ்த்திய பாராளுமன்ற உறுப்பினர், நீங்கள் படுகின்ற துயரங்களை நாங் கள் அறிவோம்.

ஏனைய குடியேற்றத் திட்டங்கள்போல குளத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாய நிலம் உங்களுக்கு இருக்கிறது.

உங்களுக்கு கிடைக்க வேண்டிய நிலஉரிமையை அதனூடாக அடைய இருக்கின்ற பொருளாதார முயற்சியைக்கண்டு மகிழுதலே எங்களுடைய கனவாக இருக்கிறது.

எனவே விரைவில் உங்களுக்கான காணிகள் பகிர்ந்தளிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது என்றார்.

இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், கமநல சேவைகள் ஆணையாளர் தயாரூபன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தயாபரன், கட்சியின் அக்கராயன் பிரதேச அமைப்பாளர் கிருபாகரன், கமக்கார அமைப்புத் தலைவர் ராயு ஆகியோர் கலந்து [illegible] குறிப்பிடத்தக்கது. (2-15-312)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65வது மாநாடு தொடர்பில் வவுனியாவில் கலந்துரையாடல்

## சுற்றுலாத்துறை பிரதி அமைச்சரும் பங்கேற்பு



( குருமன்காடு )

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது மாநாடு குருநாகலில் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதன் ஒழுங்கமைப்பு தொடர்பில் வவுனியாவில் நேற்று முன் தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

வவுனியா, கோவில்குளம் பகுதியில் உள்ள தம்பா விருந்தினர் விடுதியில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை அழைத்துச் செல்வது. அவர்களது பொறுப்புக்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வன்னியில் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் மற்றும் வன்னியின் குறைபாடுகள், தேவைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சுற்றுலாத்துறை , கிறிஸ்தவ விவகார பிரதி அமைச்சரும்., 65 ஆவது மாநாட்டுக்கான வன்னித் தொகுதி ஒருங்கிணைப்பாளருமான அருந்திக்க பெர்னாண்டோ, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னித் தொகுதி அமைப்பாளருமான கே.கே.மஸ்தான், சுதந்திரக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் வாசல, பட்டதாரிகள் சங்கத் தலைவர் ஆனந்தராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைஞர்மடம், கேப்பாபுலவு இடங்களில் 40 ஆயிரத்து 750 மி.லீ.கசிப்பு கைப்பற்று

## சந்தேகத்தின் பேரில் மூவர் கைதாகினர்



(மல்லாவி)

முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வலைஞர்மடம், கேப்பாபுலவு ஆகிய இரு இடங்களில் 40 ஆயிரத்து 750 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவங்கள் கட ந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையில் சென்ற பொலிஸ் அணியினர் மேற்படி இடங்களில் சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டு கசிப்பை கைப்பற்றியுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வலைஞர்மடம் சம்புமோட்டை களப்புப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கசிப்பு கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அவ்விடத்தில் பதுங்கியிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிள் ஒன்றினை இடைமறித்து சோதனையிட்ட போது,

கொள்கலனொன்றில் 40 ஆயிரம் மில்லிமீற்றர் கசிப்பு மறைத்து கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போது கசிப்பையும் மோட்டார்சைக்கிளையும் கைப்பற்றிய பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்களை கைது செய்தனர்.

இதேவேளை கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை முள்ளியவளை கேப்பாபுலவு கிராமத்தில் தனது உடைமையில் 750 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்த நபரொருவரை கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்டுள்ள கசிப்பையும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்காக முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# பரவிப்பாஞ்சானிலுள்ள ஒருதொகுதி காணிகள் உரிமையாளர்களிடம் விரைவில் கையளிக்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தகவலின் படி

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரவிப்பாஞ்சான் கிராமத்தில் இராணுவத்தின் வசமுள்ள 13 ஏக்கர் காணியில் மேலும் ஒரு தொகுதி காணிகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் உத்தியோகபூர்வமாக இராணுவத்தினர் கையளித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரவிப்பாஞ்சான் கிராமத்தில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறு கூறிகடந்த மாதம் உரிமையாளர்கள் முகாம் முன்பாக இரவு-பகலாக இருந்து அமைதி வழியில் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவ்விடத்திற்கு வருகை தந்து வழங்கிய வாக்குறுதியை அடுத்து மக்கள் தமது போராட்டத்தை கைவிட்டனர்.

இந்நிலையில் நேற்று இராணுவத்தின் வசமுள்ள 13 ஏக்கர் காணியிலிருந்து 3 1/2 ஏக்கர் காணிகளை இராணுவம் உத்தியோகபூர்வமாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தது. இதனையடுத்து காணி உரிமையாளர்களின் பெயர், விபரங்கள் திரட்டப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள காணிகளை கையளிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலக தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




## அனுமதிப்பத்திரத்திற்கு முறையற்ற வகையில்

# மணல் ஏற்றி பயணித்த நான்கு உழவு இயந்திரங்கள் சிக்கின



சாரதிகள் நான்கு பேர் கைது

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியத்திற்குட்பட்ட மாங்குளம், முள்ளியவளைஆகியபொலிஸ் நிலையங்களின் கீழ் உள்ள பிரதேசங்களில் சட்ட விரோதமான முறையில் மணல் கடத்தலில் ஈடுபடுவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து கடந்த வாரம் நடைபெற்ற சுற்றி வளைப்புக்களின் போது அனுமதி பத்திரத்திற்கு முறையற்ற வகையில் மணலை ஏற்றிப் பயணித்த நான்கு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதிகள் நான்கு பேரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினர் முள்ளியவளை கீற்றுக்குளம் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரத்தை கைப்பற்றியதுடன் அதன் சாரதியை கைது செய்தனர்.

இதேவேளை மாங்குளம் மணவாளன்பட்ட முறிப்பு பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணலை ஏற்றிப் பயணித்த இரண்டு உழவு இயந்திரங்களை கைப்பற்றியுள்ளதுடன் அதன் சாரதிகளையும் கைது செய்தனர்.

அதனைத் தொடர்ந்து மாங்குளம் நட்டாங்கண்டல் பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணலை ஏற்றிப்பயணித்த உழவு இயந்திரத்தை கைப்பற்றியுள்ளதுடன் அதன் சாரதியையும் கைது செய்தனர்.

மேற்படி சம்பவங்களில் மணலுடன் கைப்பற்றப்பட்டுள்ள உழவு இயந்திரங்களையும் அதன் சாரதிகளையும் மேலதிக விசாரணைக்களுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமென முள்ளியவளை, மாங்குளம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## கனகராயன்குளம் ஆரம்ப பாடசாலையில்

# குளவிக்கொட்டுக்கு இலக்கான ஆறு பேர் வைத்தியசாலையில்

(குருமன்காடு)

வவுனியா, கனகராயன்குளம் ஆரம்ப பாடசாலையில் குளவி தாக்கியதில் பாடசாலை அதிபர், மாணவர்கள் உட்பட ஆறு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை பாடசாலை ஆரம்பமாகிய நிலையில் பாடசாலை அருகில் இருந்த மரம் ஒன்றில் இருந்த குளவிகள் பறந்து வந்து தாக்கியதில் பாடசாலை அதிபர், ஆசிரியர் ஒருவர், மூன்று மாணவர்கள், சிற்றூழியர் என ஆறு பேர் பாதிப்படைந்த நிலையில் புளியங்குளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பாட சாலை அதிபர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (2-250)

# ஐந்து பேர் கொண்ட குழுவினர் தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

கிளிநொச்சி உதயநகர் கிழக்கில் ஐந்து பேர் கொண்ட குழுவினரால் தாக்கப்பட்ட குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உதயநகர் கிழக்கைச் சேர்ந்த அருணாசலம் கதிரமலை (வயது-42) என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பில் தெரிய வருவதாவது, கடந்த 22ஆம் திகதி ஐந்து பேர் கொண்ட குழுவினர் பிரஸ்தாப நபரை கடுமையாகத் தாக்கினர்.

இதன்போது அவர் மறுநாள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டனர். மேலும் ஒருவரை தேடி வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-312)

# சிறுவர்களை காணவில்லை;பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் கற்குவாரி கிராமத்தில் வசிக்கும் இரண்டுசிறுவர்களை கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை முதல் காணவில்லையென மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்கள் முறைப்பாடொன்றை பதிவு செய்தனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மாங்குளம் கற்குவாரி கிராமத்தில் வசிக்கும் ஒன்றுவிட்ட சகோதரர்களான இரண்டு சிறுவர்கள் கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை தமது வீட்டிலிருந்து மாங்குளத்திலுள்ள உறவினர் வீட்டுக்கு செல்வதாக கூறி முற்பகல் 10 மணியளவில் சென்றுள்ளனர். இரவாகியும் சிறுவர்கள் வீடு திரும்பாததை அடுத்து பெற்றோர்கள் தேடுதல் நடத்திய போது குறித்த சிறுவர்கள் உறவினர் வீட்டுக்குச் செல்லாது காணாமல் போயுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்கள் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தனர்.

இச் சம்பவத்தில் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி பயிலும் சிவநந்தன் இராமகிருஸ்ணன் (வயது-16), தரம் 8 இல் கல்வி பயிலும் கிருஸ்ண மூர்த்தி கிருஸ்ணகுமார் (வயது-15) ஆகிய இரண்டு சிறுவர்களுமே காணாமற் போயுள்ளனர். குறித்த சிறுவர்கள் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது 1929 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)

# சர்வதேச தென்னை தினத்தையொட்டி தென்னங்கன்று நாட்டல் இன்று

(வவுனியா)

சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் மற்றும் மாவட்ட செயலர் தலைமையில் தென்னங்கன்றுகள் நாட்டும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புளியங்குளம் வடக்கு புதூர் எனும் இடத்தில் அமைந்துள்ள எஸ். சிவகுமார் என்பவரது காணியில் நடைபெறும் என தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் அறிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய தலைவர்களே! ஆரோக்கிய சமூகமொன்றை கட்டியெழுப்ப இணையுங்கள்

இந்த ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் தற்போது நிறைவடைந்துள்ளன. நிறைவடைந்தது உங்கள் பரீட்சை மட்டுமல்ல மாணவர்களே! உங்கள் பாடசாலை வாழ்க்கையும் தான். பாடசாலைப் பிள்ளைகளாக பாடசாலைச் சீருடையில் பதின்மூன்று வருடங்கள் வலம் வந்த நீங்கள் இனிமேல் பிள்ளைகள் அல்ல இளைஞர்கள், யுவதிகள். நீங்கள்தான் நாளை இவ்வுலகை ஆளப் போகும் தலைவர்கள். இன்னும் சில மாதங்களில் வெளிவரப்போகும் பரீட்சைப் பெறுபேறுகள் தான் நாளைய சமூகத்தில் நீங்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும். கடந்து போன பள்ளிக்காலங்களில் நீங்கள் உங்கள் கல்விக்காக எவ்வளவு அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள், முயற்சிகள் செய்தீர்களோ அவற்றின் பெறுமதிக்கேற்ப உங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் அமைந்து உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். வெள்ளைச் சீருடையில் ஒன்றாக உங்களுடன் கூடிப் படித்தவர்கள் சிலர் நாளை வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டவாளர்கள், வங்கியியலாளர்கள், பொருளியலாளர்கள், ஆசிரியர்கள், தாதியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், இன்னும் இன்னும் பல பதவிகளை அலங்கரிப்பர்.

உங்கள் கல்வி இலக்குக்கான பயணம் நிறைவு பெற்று விட்டது. இனிமேல் கிடைக்கும் பரீட்சை வெற்றிகளைக் கொண்டு உங்கள் வாழ்வின் இலக்குகளை நோக்கிப் பயணியுங்கள். வாழ்க்கை என்பது தரிப்பிடமில்லாத ஓர் பயணம். உங்கள் இலக்குகளை நோக்கி எப்போதும் ஓடிக்கொண்டே இருங்கள். உங்களுக்காக பல்கலைக் கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தாதியியற் கல்லூரிகள் என உங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றன. இவை உங்கள் வாழ்வில் நேரான மாற்றங்களாக ஏற்படுத்துபவை. ஆனால் இன்று உங்கள் வாழ்வில் எதிர்மறையான மாற்றங்களையும் திருப்பங்களையும் ஏற்படுத்த மதுபானசாலைகள், களியாட்ட விடுதிகள் போன்றவற்றுடன் போதைப்பொருள் வியாபாரிகளும் உங்கள் வரவுக்காய் ஆவலுடன் காத்திருக்கின்றனர். கவனம் இவைபற்றி அதிகம் உங்களுக்குக் கூற வேண்டிய அவசியமில்லை. அறிந்து கொள்வதற்கேனும் அவர்கள் பக்கம் சென்று விடாதீர்கள். ''தகாத பழக்கங்கள் முதலில் வழிப் போக்கனைப் போல வரும். பின் விருந்தாளியாகி அதுவே உங்களுக்கு முதலாளியாகி உங்கள் வாழ்வை நாசப் படுத்தும்'' போதை என்பதை நீங்கள் தொடாத வரை அது உங்களுக்கு அடிமை. அதனைத் தொட்டீர்களானால் அதற்கு நீங்கள் அடிமை. நீங்கள் வாழ்வில் அடைவதற்கும் சாதிப்பதற்கும் நிறையவே உள்ளன. நிதானமாகப் பயணியுங்கள்.

இதுவரை மாணவர்கள் ஆக ஒரே திசையில் பயணித்த நீங்கள் இனிமேல் உங்கள் இலக்குகளை நோக்கி நாலா பக்கமும் பிரியப் போகிறீர்கள். இனி நீங்கள் பயணிக்கும் பாதைகள் வாழ்வில் எதனை அடையப் போகிறீர்கள் என்பதைத் தீர்மானிக்கும். நீங்கள் ஒவ்வொருவரும் உன்னதமான சமூக கலாசார பண்பாட்டு விழுமியங்கள் கொண்ட ஓர் இனத்தின் குழந்தைகளாகப் பிறந்தவர்கள். ஆனால் இன்று ஓர் உன்னதமான சமூக கலாசார பண்பாட்டு விழுமியங்கள் கொண்ட ஓர் இனத்தைச் சார்ந்த இளைஞர்கள், யுவதிகள் என்று உங்களைக்கூற மனது இடம்தரவில்லை. இன்று தனது உன்னதங்களையும் உத்தமங்களையும் தொலைத்துக் கொண்டிருக்கும் ஓரினமாகத்தான் எம் தமிழினம் உள்ளது.

நீங்கள் தான் நாளைய தலைவர்கள் என ஆரம்பத்திலேயே கூறியிருக்கிறேன். நாளைய தலைவர்கள் ஆவதற்கு இன்றே உங்களைத் தயார்ப்படுத்துங்கள். நீங்கள் உங்கள் தனிப்பட்ட வாழ்வை வளப்படுத்துவதுடன் எமது சமூகத்தைச் சீர்படுத்தும் தார்மீக பொறுப்பும் உங்களிடமே உள்ளது. எப்படியெல்லாம் வாழ்ந்த இனம், எப்படியோ வாழ ஆசைப்பட்ட இனம் இன்று வீழ்ந்து சீர்கெட்டுக் கொண்டிருக்கின்றது. நிச்சயம் உங்களால்தான் எங்கள் சமூகத்தை சீர்படுத்த முடியும். அதற்கு முதல் நீங்கள் நேரான பாதையில் செல்லுங்கள், தீயனவற்றை ஒதுக்குங்கள். உங்கள் பாதையைப் பின்தொடர உங்கள் இளையவர்கள் காத்திருக்கின்றார்கள்.

உங்களுக்குத் தெரியுமா? பல்லாயிரக் கணக்கானவர்களின் உயிர்த்தியாகங்கள், அர்ப்பணிப்புக்களால் கட்டியெழுப்பப்பட்ட ஓர் இனம் இன்று குடை சாய்ந்து கொண்டிருக்கின்றது. உரிமைகளுக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த எமது இனம் இன்று எஞ்சியிருப்பதையாவது பாதுகாக்க வேண்டும் என்றே தவிக்கின்றது.

அன்று கல்வியில் தரமுயர்ந்து நின்ற எமது நிலை இன்று தலைகுனிவாக உள்ளது. இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் வடமாகாணமே 2014 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. இத்தகவல்கள் வெளியே செல்லச் செல்ல எம் கல்வி மீது வெளியார் வைத்திருக்கும் மதிப்பு மெல்ல மெல்லக் குறைவடையும். இன்றும் வடபகுதி ஆசிரியர்களிடம் கல்வி கற்பதற்காக கிழக்கு, மத்திய, தெற்கு மாகாணங்களிலிருந்து தமிழ்மொழி மூல மாணவர்கள் பெருமளவில் வருகை தருகின்றார்கள். இன்று எமது கல்வி, கலாசாரப் பண்பாடுகள் என்பன சரிந்து விட்டன என்று கூறவில்லை சரிய ஆரம்பித்திருக்கின்றது. ஆரம்பத்திலேயே நாம் சுதாகரித்துக் கொண்டால் நாம் மீண்டுவிடலாம். எமது சமூகத்தை பல வீனங்களிலிருந்து மீட்டு புத்தொளி ஊட்டுவது உங்கள் முன் உள்ள மிகப் பெரிய சவால். திட்டமிட்ட வகையில் எங்கள் பிரதேசத்தில் போதைப்பொருட்கள் விற்கப்படுகின்றது. திட்டமிட்டு எமது இனம் சிதைக்கப்படுகின்றது என கூச்சலிட்டுக் கொண்டிருந்த எமக்கு ஒன்று விளங்கவில்லை. இன்று வடபகுதி ஊடாகத்தான் ஏனைய பிரதேசங்களுக்கு போதைப் பொருட்கள் கடத்தப் பட்டுக் கொண்டிருக்கின்றன. வடகடல் ஊடாக நாட்டுக்குள் வரும் கஞ்சா யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளூடாக ஏனைய பகுதிகளுக்குள் கடத்தப்படுகின்றது.


புகழ் விஜேந்திரன்

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல பெருந்துயரத்திலிருந்து மீள்வதற்குள் தொடர் துயரங்களாக போதைவஸ்துப் பாவனை, கொள்ளைச் சம்பவங்கள், பாலியல் பலாத்காரக் கொலைகள் என அதிகரித்துச் செல்லும் சமூகக் குற்றச் செயல்கள் எம் மனதை வாட்டி வதைக்கின்றது. உரிமைகளுக்காக கடையடைப்புச் செய்து கர்த்தாள் அனுஷ்டித்த நாங்கள் குறுகிய காலத்துக்குள்ளேயே எம்மவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் பலாத்காரக் கொலைக்கு நியாயம் கேட்டு தெருத் தெருவாய் ஊர்வலம் போனோம். இந்நிலை கண்ட உலகெங்கும் வாழும் தமிழர்கள் கண்ணீர் விட்டனர். எமது இன்றைய நிலையிலிருந்து விரைவாக மீண்டெழ வேண்டும். இல்லையேல் அது எமக்குப் பழக்கப்பட்ட தொன்றாகி விடும்.

இளைஞர், யுவதிகளே! சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி சீர்படுத்த முதலில் உங்களை தகுதியானவர்களாக்க வேண்டும். பரீட்சை முடிந்து விட்டது. பெறுபேறுகள் வரும் வரை ஓய்வெடுப்போம் என ஓய்வாக இருந்து விடாதீர்கள். ஓய்வாக இருந்தால் மனது வெறுமையாகிவிடும். "இயற்கை வெறுமையை வெறுக்கின்றது. அதனால் தான் வெறுமையான மனதுகளை தீய சிந்தனைகளாலும் கெட்ட எண்ணங்களாலும் நிரப்பி விடுகின்றது" பலமான போராளிக் குழுக்களைக்கூட ஓய்வெடுக்க வைப்பதன் மூலம் பலமிழக்கச் செய்து விடலாம் என்பதை உலகம் இன்று கற்றுக் கொண்டுள்ளது. எனவே ஓய்வின்றி இயங்கிய வேகத்திலேயே தொடர்ந்து இங்குங்கள். கிடைக்கும் காலங்களில் ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ளுங்கள். அது உங்கள் உயர் கல்விக்கு உதவும். எங்கள் இரண்டாம் மொழியாகிய சிங்களத்தைப் படியுங்கள். அது உங்கள் வேலை வாய்ப்புக்களுக்கும் பதவியுயர்வுகளுக்கும் உதவும். இன்று ஒவ்வொருவருக்கும் அவசியமான கணனி அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். சந்தர்ப்பமுள்ளவர் கள் ஏதாவது ஓர் தொழிலை கற்றுக் கொள்ளுங்கள். அது உங்கள் வாழ்க்கைக்கு உதவும். மாலை நேரங்களில் நன்றாக விளையாடுங்கள். அது உங்கள் உடலுக் கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் தரும். நாளை ஆரோக்கிய சமூகமொன் றைக் கட்டியெழுப்ப இன்று முதலில் உங்களை உடல்உள சமூக ஆரோக்கியமுள்ளவர்களாக மாற்றுங்கள். எம் இனத்தின் விடிவெள்ளிகளாக ஒளிதாருங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலில் இன்று



## தெய்வீகச் சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு உலக சைவத் திருச்சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் தெய்வீகச் சொற்பொழிவு இன்றும் இடம்பெறும். தீர்த்தத்திருவிழாவான இன்று மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் சைவப்புலவர் கந்தசத்தியதாசன் ''பாதம் தொழுவோர் பாவம் தீர்ப்பார்'' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## ஆன்மீகச் சொற்பொழிவு

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை ''ஆற்றுப்படை'' பற்றி தமிழ் நாட்டு ஆன்மீகப் பேச்சாளர் எஸ்.என். பாலசுப்பிரமணியன் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவகாலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் யாழ்.மாவட்ட அற நெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்றும் பி.ப 3மணி தொடக்கம் மாலை 6மணி வரை இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார். சிவ அடியவர் பற்றிய கதாப்பிரசங்கத்தை அனுசாந் வழங்குவார். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க்கந்தனின் பெருந்திருவிழாவினை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7மணிமுதல் 8மணிவரை நடத்திவரும் தெய்வீக இசைச்சங்கமத்தில் தீர்த்தத்திருவிழாவான இன்று வியாழக்கிழமை செல்வி அம்சத்வனி விக்ரர், செல்வி சௌமியா உதயவிமலதாஸ், செல்வி கல்யாணி குமாரசிவன் ஆகியோரின் வீணாகானம் இடம்பெறும். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று வியாழக்கிழமை பாட்டு-பொன் ஸ்ரீவாமதேவன், வயலின்-கே.குகபரன், மிருதங்கம்-க.கஜன், கடம்-கு.ரவிசங்கர் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## வில்லிபாரதத்தில் 'கர்ணன்'

நல்லூர்க் கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபை நடத்தி வரும் தெய்வீகத் தொடர் இசைப்பேருரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்று வருகின்றது. இந்நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சி.வை.நித்தியானந்த சர்மாவின் வில்லிபாரதம் பற்றிய தொடரில் இன்று வியாழக்கிழமை ''கர்ணன்'' பற்றி சங்கீத கதாப் பிரசங்கம் இடம்பெறும். (இ-3)

## ஆன்மீக அருளுரை

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரை (ஞானயக்ஞம்) எனும் நிகழ்வு நல்லூர் ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இரவு 7.15 மணி முதல் 8மணி வரை இடம்பெறும். இந்நிகழ்வில் இன்று வியாழக்கிழமை கண்டி வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி கார்த்திக் சைதன்யா ''நான்'' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை வழங்குவார். இ-3

# நல்லைக்கந்தனின் தீர்த்த உற்சவம் காண வாரீர்



நல்லைக்கந்தப் பெருமானின் மஹோற்சவத்தின் தேர் உற்சவம் சிறப்புற நடைபெற்றது.


இன்று ஆவணி மாத அமாவாசைத் திதியிலே 25 ஆம் நாளான தீர்த்த உற்சவம் நடைபெறுகின்றது. பஞ்சகிருத்தியத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்கின்ற இறைவனின் ஐந்தொழில்களையும் குறிக்கின்றது. மஹோற்சவ காலத்தில் எழுந்தருளி திருவீதி உலாவரும் காட்சியை தரிசனம் செய்ய முடியாதவர்களுக்கு தரிசிக்க முடியாதவர்களுக்கும் திருவருள் பாலிக்கவே தீர்த்த உற்சவம் நடைபெறுகின்றது. பஞ்சமூர்த்திகளான விநாயகர் வேற்பெருமான், வள்ளியம்மை தெய்வானையம்மை, சண்டேஸ்வரர் சண்முக தீர்த்தக் குளத்துக்கு தீர்த்தம் ஆட எழுந்தருளும் காட்சி கண்கொள்ளக்காட்சியாகும். இக்காட்சி ஆண்டாண்டு காலமாக பலகோடி அடியார்கள் தரிசித்து வழிபாடு இயற்றிய காட்சியாகும்.

சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும்
மறக்குறத்தி வள்ளி மணாளனாக– நிறக்கொடிகள்
ஆடும் அழகுடைய நல்லூர் வாழ் ஆண்டவனே
நீடும் அருள் தருவாய் நீ

என்று பாடினார் எம் தவஞானி யோகசுவாமிகள். ஞானிகள் நாடிய புனித பூமியில் இதனை நாமும் பாடி நல்லைக்கந்தப் பெருமானைத் தரிசித்து தீர்த்த உற்சவம் கண்டு இன்புறுவோம். அடியார்களுக்கு நல் அருள் பாலிக்க பிரார்த்திப்போமாக.

கா.சிவபாலன்

# நல்லூரானுக்கு இன்று தீர்த்தத்திருவிழா



## தீர்த்தம் வாரி இன்று வா!



கையிலே வேலையா
கந்தன் முகம் பாரய்யா
கையிலே வேலையா
கந்தன் முகம் ஆறய்யா
அப்பனிடம் கனி கேட்டான்
ஔவைக்கு கனி தந்தான்
சிக்கலிலே வேல் பெற்றான்,
செந்தூரிலே தலை கொய்தான்
நல்லோர்க்கு பொருள் கொடுத்தான்.
அல்லோர்க்கு அருள் கொடுத்தான்
பலனளிக்கும் நிலமானான் –யாழ்
பாலைவனம் செழிக்க நல்லூரில் வருகிறான்

–ப.அம்சா, தாவடி

## உற்ற துணை நீயே வருக

கோல மயில் வாகனப் பெருமானே,
குன்றுகள் தோறும் விளையாடும் குகனே,
குறவள்ளி தெய்வானை நாயகனே,
கார்த்திகையில் குவிகின்றோம் கந்தனே.

மீசாலையூர் கமலா

## நன்னீராடும் நல்லூரா

நல்லூர் முருகனுக்கு இன்று நன்னீராட்டு–உமது
வேலின் தீர்த்தம் –அன்பினைத் தரும் ,அருளினைத் தரும்
வேலின் தீர்த்தம் –வல்லமை தந்து எம் வறுமை தனைப் போக்கிடும்
வேலின் தீர்த்தம் –தொல்லைகள் அனைத்தும் தொலைத்துவிடும்
வேலின் தீர்த்தம் –வையகத்தைக் காத்து நின்று அருள் பாலிக்கும்
வேலின் தீர்த்தம் –உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும்
–வஞ்சகர்களை அழித்துவிடும்
வேலின் தீர்த்தம் –உம்மை உள்ளன்போடு வழிபடுவோர்க்கு
–என்றுமே தேனாமிர்தம்

நயினை விசு இராசநாயகம்.

## என்றும் உன்னடி தஞ்சம்



தந்தையின் நெற்றியில் உருவாகி
தாயிடம் வேல் வாங்கி
இந்திர உம்பரைக் காக்க
வந்த எங்கள் வடிவேலவனே
சுந்தரத் தமிழினை ஆய்ந்த
செந்தில் குமர வடிவேலே
எந்தையே நல்லைக் குக நாதா
என்றும் உன்னடி தஞ்சம்!

அரியாலையூர் சி.சிவநாதன்

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

மஞ்சத்தி லாடிடும் மறைவேத நாயகா
மாசிலா விண்பவொளியே
நெஞ்சத்திற் றுஞ்சியெழு வஞ்சவினை யாவையும்
நெருங்காது விட்டுவொழியே
தஞ்சமென் றஞ்சியுன் கொஞ்சுந்தாள் பற்றியே
தமிழ்க்கவிதை பாடுகின்றேன்
நஞ்சிலே தோய்ந்தவிழி நாயகியர் சூழவரும்
நல்லூரின் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிப் பாலத்தின் ஊடாக கிடைக்கும் உதவிகள் மக்களை சென்றடைகின்றது

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உதவிப்பாலத்தின் ஊடாக கிடைக்கும் உதவிகள் பயனுள்ள வகையில் எம் மக்களை சென்றடைகின்றது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் உறவுகளின் அன்பளிப்பில் பல்கலைக் கழக மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது மாகாணத்தில் உள்ள மக்களுக்கு "உதவிப் பாலம்" என்ற திட்டத்தின் ஊடாக பலவகையான உதவிகளை வழங்கி வருகிறோம். அத் திட்டத்திற்கு பலர் உதவி செய்து வருகிறார்கள்.

ஆனால் எமது மக்களுக்குரிய தேவைகளை நிறைவு செய்வதற்குரிய முழுமையான அளவு நிதி கிடைக்கின்றது எனக் கூற முடியாது. இருப்பினும் கிடைக்கும் நிதியை பயனுள்ள வகையில் மக்களிடம் கையளித்து வருகிறோம்.

தேவையுடையவர்களை இனங்கண்டு அவர்களுடைய தரவுகளை பெற்றதனடிப்படையில் தொடர்ச்சியாக இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

இத்திட்டத்துக்கு யார் யார் உதவிகளை செய்கிறார்களோ அதை அவர்கள் சார்பில் உள்ள ஒருவரின் கண்காணிப்பிலேயே பயனாளிகளுக்கு வழங்கி வருகிறோம்.

அப்போது தான் தாம் வழங்கிய உதவிகள் பயனுள்ளதாக சென்றடைந்துள்ளது என அவர்களுக்கு தெரியவரும்.மேலும் உதவிகளை செய்வதற்கு முன்வருவார்கள்.

எனவே எமது மக்களுக்கு உதவி செய்ய முன்வரும் கொடையாளர்கள்.ள புலம்பெயர் உறவுகள் எமது உதவிப்பால திட்டத்தின் ஊடாக உதவிகளை செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## 5 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனம் வல்வெட்டித்துறை நகர சபைக்கு வழங்கல்

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் இருந்து 5 மில்லியன் ரூபா பெறுமதியுடைய மலக்கழிவு அகற்றும் வாகனம் ஒன்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்றைய தினம் வல்வெட்டித்துறை நகர சபைக்கு வழங்கப்பட்டது. குறித்த வாகனத்தை வல்வெட்டித்துறை நகர சபை செயலாளர் முதலமைச்சரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். (இ-9)



## சாரணிய இயக்கத்தின் அவசியம் தற்போது அதிகம் உணரப்படுகிறது

### வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு





போருக்குப் பின்னரான இன்றைய சூழலில் இளைய தலைமுறையினரிடையே குற்றச் செயல்கள் மலிந்து வருகின்றன. பண்பாட்டுப் பிறழ்வான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இந் நிலையில் சாரணிய இயக்கத்தின் அவசியம் தற்போது அதிகம் உணரப்படுகிறது என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சாரணியர் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி கனடாவில் வெளியிடப்பட்ட அஞ்சல் தலையின் அறிமுக நிகழ்ச்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் ஐங்கரநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகில் எத்தனையோ விதமான சங்கங்களும் இயக்கங்களும் இயங்கி வருகின்றன. ஆனால் மழலைகள் முதல் எல்லா வயதுடைய மாணவர்களுக்கும் ஒழுக்கத்தையும் நற்பண்பாட்டையும் கீழ்ப்படிதலையும், பிறருக்கு உதவும் மனப்பாங்கையும், தேசப்பற்றையும் போதிக்கும் இயக்கமாக மிளிர்வது சாரணியர் இயக்கம் தான். பாடசாலையைவிட்டு வெளியே சென்று வெளிக்களப் பயிற்சிகளை வழங்குவதன்மூலம் சாரணிய இயக்கம் மாணவர்களை இயற்கையை நேசிக்கவும் கற்றுத் தருகிறது.

சாரணியம் உன்னதமான குணங்களையெல்லாம் மனிதர்களில் குடிகொள்ளச் செய்கிறது. அந்தவகையில், பாடசாலையில் பயிலுகின்ற மாணவர்கள் எல்லோரும் சாரணிய இயக்கத்தில் இணைந்து கொள்வதன்மூலம் நன்மானுடர்களாக உயர்வு பெற முடியும் என்றும் தெரிவித்தார்.

யாழ்.இந்துக கல்லூரியின் அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் செ. தேவரஞ்சன், தேசிய தலைமைக் காரியாலய ஆணையாளர் ந.சௌந்தரராசன், கனடாவில் இருந்து வருகை தந்திருந்த தேசியப்பயிற்றுநர் இ.ராஜ்குமார் உட்பட சாரணிய அமைப்பின் மூத்த உறுப்பினர்கள் பலரும் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சாரணர்களும் கலந்து கொண்டிருந்தனர்கள். (இ-7-10)

## யாழ்.கட்டளைத் தளபதியுடன் அங்கஜன் எம்.பி.திடீர் சந்திப்பு

### காணி விவகாரம் தொடர்பில் கலந்துரையாடினார்

வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி யாழ்ப்பாண கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பலாலியில் சந்தித்து கலந்துரையாடினார்.



இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் கருத்து தெரிவிக்கையில்,

பத்திரிகையில் வெளிவந்த செய்திதொடர்பாக வயாவிளான்,மயிலிட்டி மற்றும் பலாலிதெற்கு மக்கள் என்னை சந்தித்து கலந்துரையாடினார்கள். இவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பாக அவசரமாக இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது காணி சுவீகரிப்பு என்ற வார்த்தை பிரயோகத்தை தான் பயன்படுத்தவில்லை என்று கட்டளைத் தளபதி கூறியதாகவும் இப்படியான சுவீகரிப்பு திட்டங்கள் இல்லை என்றும் ஒருவருட காலப்பகுதிக்குள் படிப்படியாக காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்படுவார்கள் என்றும் இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் வாரங்களில் 454 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளது என்றும் மீள் குடியேற்ற பகுதியில் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீட்டுத் திட்டங்கள் மற்றும் வசதிகள் தொடர்பாக விரிவாக கலநதுரையாடப்பட்டதுடன் இந்த மீள்குடியேற்றம் தொடர்பாக உருவாக்கப்பட்ட வயாவிளான் மக்கள் ஒன்றியம் எதிர்வரும் இரண்டு வாரங்களிற்குள் கட்டளை தளபதியை சந்தித்து கலந்துரையாடுவதற்கான நடவடிக்கைகளைதான் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## சிகிச்சை பலனின்றி மாணவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மனவிரக்தியில் தன்னைத்தானே தீ மூட்டிய மாணவி ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

பண்ணாகம் பல்லச் சந்தியை சேர்ந்த மகேந்திரன் சுலக்ஷனா (வயது - 17) என்பவரே உயிரிழந்தவாராவர்.

குறித்த மாணவி தாய் தந்தையை இழந்து பேத்தியாரின் பாதுகாப்பில் வாழ்ந்து வந்துள்ளார்.

இவருடன் சேர்த்து 4 சகோதரர்களையும் பேத்தியாரை கூலித்தொழில் செய்து பராமரித்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த 20 ஆம் திகதி அயல் வீட்டில் உள்ள மாணவியின் தாயார் இந்த மாணவியின் வீட்டுக்கு வந்து தனது மகளுடன் பழக்கம் வைக்க வேண்டாம் எனக் கூறி மாணவியை தாக்கியுள்ளார்.

இதனால் மனவிரக்தி [illegible] [illegible] றைய தினம் இரவு 7 மணிக்கு தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத்தானே தீ மூட்டியுள்ளார்.

மாணவியின் அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த அயலவர்கள் உடனடியாக தீயை அணைத்து மாணவியை [illegible] வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வந்த மாணவி சிகிச்சை பலனின்றி கடந்த 28 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவியே வறுமையின் மத்தியிலும் வீட்டுப் பொறுப்புக்களை கவனித்து வந்ததாகவும் மாணவியின் இழப்பு தம்மை மிகவும் பாதித்துள்ளதாக மரண விசாரணையின் போது மாணவியின் பேத்தியார் கதறி அழுதார்.

குறித்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தால் பிரிட்டனில் கவனயீர்ப்புப் போராட்டம்

## காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டது

காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டு கடந்த கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தின் முன்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதில் நூற்றுக்கணக்கான தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொண்டனர்.

2009 ஆம் ஆண்டு இராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட 105 போராளிகளது சந்தேகத்திற்கு இடமான மரணங்கள் குறித்து நம்பகத்தன்மையுடன் சர்வதேச விசாரனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

காணாமற்போனோர் பற்றிய ஆரோக்கியமான நம்பகத் தன்மையுடைய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

கைதுகள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், நில அபகரிப்பு, தமிழ் பிரதேசங்கள்.சிங்கள மயமாக்கப்படல் இவை அனைத்தும் உடனே நிறுத்தப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து காணா மற்போனோர் நாளில் உலகிற்கு உரத்துக்கூறும் அதே நேரம் பிரித்தானியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களால் பிரித்தானிய பிரதமருக்கு மனு ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் இதில் கலந்து கொண்ட பிரித்தானிய நாடு கடந்த தமிழீழ அரசாங்க முக்கிய செயற்பாட்டாளரான வேதநாயகம் சஞ்ஜீவ தனுஷன் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் நடந்தேறிய இறுதி யுத்தத்தின் போது காணாமற்போனோருக்குரிய தீர்வுத்திட்டங்கள் இது வரை காலமும் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை.

இவைகள் மிக விரைவாக ஒரு நியாயமான விசாரணை மூலம் வெளிக் கொணர்ந்து இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் மற்றும் இலங்கையில் இன்னும் ஈழத்தமிழருக்கு இழைக்கப்படடுக் கொண்டிருக்கின்ற மனித உரிமை மீறல்கள், தமிழரின் நிலங்கள் சூறையாடப்பட்டு சிங்களக் குடியேற்றங்களை அமைத்தல், தமிழருக்குச் சொந்தமான நிலங்களில் அதாவது காணிகளில் புத்த விகாரைகளை நிறுவுதல்போன்ற விடயங்கள் உடனடியாக இலங்கை அரசு நிறுத்த வேண்டும்.

இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் ஈழத்தமிழருக்கு எதிராக நடத்தப்படக் கூடாது என்பதனை பிரித்தானிய அரசானது இலங்கை அரசுக்கு வலியுறுத்த வேண்டும்.

ஈழத் தமிழருக்கு எதிரான செயல்கள் நிறுத்தப்படும் வரை புலம்பெயர் ஈழத் தமிழராகிய எம்மால் போராட்டங்கள் நடந்து கொண்டே இருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பித்தானிய நாடுகடந்த தமிழீழ அரசின் மற்றுமோர் முக்கிய செயற்பாட்டாளரான பிரதீசன் அருள்ராசா தெரிவிக்கையில்,

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் பின் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையான நிலையிலும் இன்று வரை கிட்டத்தட்ட 105 போராளிகள் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளனர்.

எனவே அவர்களின்மரணம் சந்தேகத்திற்குரியதாக அமைந்திருப்பதால் எஞ்சியிருக்கின்ற முன்னாள் போராளிகள் முழுமையான ஓர் நம்பகத்தன்மையுடைய மருத்துவப் பரிசோதனைக்கு அவர்கள் உடனடியாக உட்படுத்தப்பட வேண்டும் என்றும் இன்னும் புனர்வாழ்வளிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போராளிகளையும் மற்றும் அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்து அவர்களுக்கான வாழ்வாதாரங்களை இலங்கை அரசானது ஒழுங்குபடுத்துத்திக் கொடுக்க வேண் டும் என்றும் தெரிவித்தார். (இ-10)






பிரித்தானிய நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர் வேதநாயகம் சஞ்ஜீவ தனுஷன்



பிரித்தானிய நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர் பிரதீசன் அருள்ராசா

# அனைத்துலக காணாமற்போனோர் நாளில் ஜேர்மனியில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வு








(பெர்லின்)

சர்வதேச காணாமற்போனோர் தினம் உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் ஓகஸ்ட் 30 ஆம் திகதி கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் ஜேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவையினர் மற்றும் தமிழ் இளையோர் அமைப்பால் ஸ்டுட்கார்ட் (Stuttgart) நகரில் கவனயீர்ப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளினால் காணாமற் போகடிக்கப்பட்ட மக்கள், ஊடகவியலாளர்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், தன்னார்வத்தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கான நீதியை வலியுறுத்தி குரலெழுப்பியதோடு. இறுதிப் போரின் போது காணாமல் போகடிக்கப்பட்ட 1,46,679 பேரின் நிலை குறித்தும் கேள்வியெழுப்பினர்.

அத்தோடு மௌனமாக அரங்கேறிக்கொண்டிருக்கும் முன்னாள் போராளிகள் மீதான உயிர்க்கொலைகள் தொடர்பாகவும் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. சிங்கள பேரினவாத அரசின் படுகொலையை வெளிப்படுத்தும் முகமாக ஜேர்மன் மொழியில் துண்டுப் பிரசுரமும் பல்லின மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (இ)

# கணவன், மனைவி காயம் தீ சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை



(கரணவாய்)

தீயில் எரிந்து கணவன், மனைவி ஆகிய இருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் தடயவியல் நிபுணர்கள் தடயங்களைப் பதிவு செய்துள்ளனர்.

தீயில் எரிந்ததாகத் தெரிவித்து அல்வாய் வடக்கைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை நிசாந்தன்(வயது-31), அவரது மனைவியான நிசாந்தன் கல்பனா(வயது-25) ஆகியோர் கடந்த 29ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அவசரப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.


இச் சம்பவம் தொடர்பில் நேற்றுப் புதன்கிழமை பொலிஸ் தடயவியல் நிபுணர்கள் அவர்களது வீட்டில் தடயங்களைப் பதிவு செய்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளை சீர்குலைத்தவர் மகிந்த

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட சமாதான முயற்சிகளை மகிந்த ராஜபக்ஷவே சீர்குலைத்தார் என சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.



சிலாபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போது அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தை பலர் விமர்சனம் செய்கின்றார்கள். எனினும் கடந்த அரசாங்கத்தை விடவும் இந்த அரசாங்கம் நல்லது.

கடந்த அரசாங்கம் வரலாற்றில் இந்த நாட்டை மிகவும் மோசமான அதளபாதாளத்தில் தள்ளிய அரசாங்கமாகும். ரணில் செய்த அனைத்து விடயங்களும் பிழையானது என 2005 ஆம் ஆண்டில் மகிந்த கூறினார்.

புலிகளுக்கு இடமளிக்கப்பட்டது. புலிகளை ரணில் தோளில் சுமக்கின்றார்கள். நாடு அழிக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டில் செளபாக்கியத்தை உருவாக்குவேன் என மகிந்த கூறினார்.

எனினும் ரணில் விக்கிரமசிங்க என்ன செய்ய திட்டமிட்டிருந்தார்?

பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் கைச்சாத்திட்டு நாடு பிளவுபடும் உரிமையின்றி உள்ளக சுயாட்சி அதிகார பொறிமுறைமை ஒன்றை உருவாக்க ரணில் திட்டமிட்டார்.

எமக்கு பிளவடைய வேண்டிய உரிமை அவசியமில்லை என்றே பிரபாகரன் கூறினார். ரணிலின் திட்டத்திற்கு உடன்பட்டிருந்தார்.

இணக்கப்பாடு குறித்த உத்தேச அரசியல் அமைப்பு முறைமை ஆவணமொன்று முன்வைக்கப்பட்டது. இந்த ஆவணத்தை சிங்களத்தில் மொழிபெயர்க்காது மகிந்தவும் விமல் வீரவன்சவும் பல்வேறு குழப்பங்களை விளைவித்து, ஆவணங்களை கிழித்து குப்பையில் போட்டனர்.

மகிந்த ராஜபக்ஷ 2005 இல் இனவாதத்தை விதைத்து நாட்டை குழப்பி ஆட்சியை கைப்பற்றினார். போர் செய்யாது நாட்டின் சொத்துக்கள் அழிவடைவதனை பாதுகாத்து நல்ல பயணமொன்றை மேற்கொள்ள முயற்சித்த ரணிலை புலி ரணில் என மகிந்த அடையாளப்படுத்தினார்.

அவ்வாறு கூறிய மகிந்த நாட்டை கண்ணீர் ஆறாக, இரத்தக்காடாக மாற்றி போர் செய்தார். வடக்கு கிழக்கு மாகாணங்கள் அழிக்கப்பட்டன.

கொலையாளிகள் உள்ள நாடாகவே முழு உலகமும் எம்மைப்பார்த்தது. மகிந்த இந்த மண்ணை இரத்தத்தினால் நனைத்தார். பெளத்த நாடாக கருதப்பட்டாலும் மிலேச்சத்தனமான பிக்குகள் இருக்கும் நாடாக இலங்கை சித்தரிக்கப்பட்டது.

இவ்வாறு பல வழிகளிலும் மகிந்த நாட்டை அழித்தார். தற்போதைய அரசாங்கம் நாட்டை மீட்டு எடுக்க முயற்சிக்கின்றது.

இந்த அரசாங்கத்திற்கு சார்பாக பேசுவதாகவும் இந்த அரசாங்கத்தின் கைக் கூலிகளாகவும் எம்மை சிலர் அடையாளப்படுத்துகின்றனர்.

நாம் இந்த அரசாங்கத்தின் செல்லப்பிராணிகள் தான். எனினும் நாம் சொல்லும் நல்லதை கேட்கும் எஜமானர்களாக அரசாங்கத்தை மாற்றவே நடவடிக்கை எடுக்கின்றோம்.

நல்லிணக்கம், சமாதானம், நல்லாட்சி, ஜனநாயகம் போன்றவற்றுக்காக போராடுகின்றோம் என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# குறைவடைந்த பரீட்சை முறைகேடுகள்

நடைபெற்று முடிந்த உயர்தரப் பரீட்சை மற்றும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான முறைகேடுகள் இந்த வருடம் குறைவடைந்துள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

2014ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சை முறைகேடுகள் தொடர்பில் 402 முறைப்பாடுகளும், 2015 இல் 152 முறைப்பாடுகளும் கிடைத்ததாகவும், இந்த வருடம் இது தொடர்பில் 48 முறைப்பாடுகள் மட்டுமே கிடைத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, 2014இல் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் தொடர்பாக 38 முறைப்பாடுகளும், கடந்த வருடம் 22 முறைப்பாடுகளும் கிடைத்துள்ள போதிலும் இவ்வருடம் 15 முறைப்பாடுகளே கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்வருடம் கிடைத்துள்ள முறைப்பாடுகள் பார்த்து எழுதுதல், பரீட்சை மண்டபங்களில் கதைத்தல் போன்ற சாதாரண விடயங்களே முறைப்பாடுகளாகக் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# ஜனாதிபதியின் இணையத்தளத்திற்கு சைபர் தாக்குதல்; காரணம் வெளியானது

(கொழும்பு)

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலுள்ள பாதுகாப்பு குறைவு தொடர்பில் ஜனாதிபதியை தெளிவூட்டும் நோக்கிலேயே, ஜனாதிபதியின் இணையத்திற்குள் ஊடுருவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலபிட்டிய முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தப்பட்ட போதே சட்டத்தரணி இந்த விடயத்தை தெளிவூட்டியுள்ளார்.

அத்துடன், நாட்டில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியை தெளிவூட்டுவதும் தமது தரப்பினரின் நோக்கம் என சட்டத்தரணி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, தமது தரப்பினர் எந்தவித குற்றவியல் செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் ஊடுருவி, அதிலிருந்த தரவுகளில் மாற்றங்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும் 17 வயதான சிறுவனொருவனும் அடங்குவதுடன், அந்த சிறுவனை எதிர்வரும் இரண்டாம் திகதி வரை சிறுவர் நன்னடத்தை இல்லத்தில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும், கைது செய்யப்பட்ட மற்றைய சந்தேக நபரான 27 வயதுடைய நபரை நாளை 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### முதுகிற்குப் பின்னால் ஏதும் செய்யலாமா?

பள்ளிப் பையன்கள் சிலர் வாத்தியார் முன்னே போகும் போது முதுகிற்குப் பின்னால் குரங்கு சேஷ்டைகள் செய்வார்கள். மற்ற பையன்கள் சிரிப்பார்கள். சில பையன்கள் இங்கைக்கூட முதுகில் தெளிப்பவர்கள்.

பக்குவமறியாத வயதில் செய்யப்படும் இத்தகைய தவறுகளைக்கூட மன்னித்து விடலாம். ஆனால் விபரம் தெரிந்தவர்கள் முகத்திற்கு நேரே சிரித்துப் பேசிவிட்டு முதுகிற்குப் பின்னால் தவறாகப் பேசியும் விபரீதமாகச் செயற்பட்டும் வருகிறார்களே இவர்களை என்ன செய்வது?

உங்களைப் போல உண்டா என்று பேசும் பேச்சும் வேண்டாம்; அவரை விட மோசமான மனுஷன் இல்லை என்கிற ஏச்சும் வேண்டாம்.

ஒருவரை அடியோடு பிடிக்கவில்லை என்றால் ஒதுங்கலாம்;ஒதுக்கலாம்; தவிர்க்கலாம். அதை விட்டுவிட்டு நம் இயல்புகளை மறைத்துப் போலியான முகமூடியை அணிந்து கொள்வதேன்?

மற்றவர்களின் முதுகிற்குப் பின்னால் ஒருவர் பேசும் பேச்சுக்கள் அல்லது நடவடிக்கைகள் என்றாவது ஒருநாள் வெளியாகி விடும்-வெளிப்பட்டு தீரும்.

ஒரு விரோதி தன் முதுகிற்குப் பின்னால் ஏதும் செய்தால் ஒருவர் அதிர்ச்சி அடைய மாட்டார். ஆனால் தனக்கு மிக வேண்டிய ஒருவர் அப்படி நடந்து கொண்டாலோ அதை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியாது. இது மனித இயல்பு. எனவே நல்லுறவு வட்டத்தில் உள்ளவர்கள் இந்தப் பொய்யுறவைத் தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் கொலைகாரன் என்கிற மோசமான பட்டத்திற்கு அடுத்த பட்டமான நம்பிக்கைத் துரோகி என்கிற பட்டம் வந்து சேரும்.

ஒருவருக்குப் பின்னால் மற்றவர் செய்த சதி வேலை ஒருவேளை வெளியாகிவிட்டால்

''பாவம் அவருக்கு வேறு வழியில்லை. இன்னாருக்கு விசுவாசியாக நடந்து கொள்ள வேண்டிய கட்டத்தில் நம்மவர் சூழ்நிலைக் கைதியாகிவிட்டார்'' என்று எண்ணும்படியான சூழ்நிலை சற்றேனும் நிலவவேண்டும். இத்தகைய நிலையில்தான் முதுகிற்குப் பின்னால் நிகழ்த்தப்பட்ட செயல் மன்னிப்பிற்கு உரியதாகிறது.

இதுபோக முதுகிற்குப் பின்னால் இதைச் செய்கிறோமே,இது சம்பந்தப்பட்டவருக்குத் தெரிய நேர்ந்து நேருக்கு நேர் கேட்டுவிட்டால் முகத்தை எங்கே-எப்படி வைத்துக்கொள்வது என்கிற சிந்தனையாவது எழ வேண்டும். இது அத்தகைய செயலைச் சிறிதேனும் தவிர்க்கும்.

வகையாக மாட்டிக்கொண்டால் உண்மையை ஒப்புக்கொள்ளும் தைரியமும் பரியக்குவமும் முதுகிற்குப்பின்னால் வேலை செய்பவர்களுக்கு இருக்க வேண்டும்.

நாம் முதுகிற்குப் பின்னால் செய்ய வேண்டிய காரியம் ஒன்றே ஒன்றுதான். அது தட்டிக் கொடுப்பது!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சேவையாளர் போட்டிப்பரீட்சை-2016

## பொதுஅறிவும் நுண்ணறிவும் (பயிற்சிக்குரியது)

தொகுப்பு:-P.உமாசங்கர் M.com மருதானை தொழில்நுட்பக் கல்லூரி

கொழும்பு - 10

◆இலக்கம் 01 தொடக்கம் 20 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் சரியான அல்லது பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைகள் எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1.இலங்கையின் கிராம அலுவலர் சேவை ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாது?
1) 1956 2)1958 3) 1962 4) 1963

2.பொது நிர்வாகமற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினது உத்தியோகபூர்வ இணையத்தளம் யாது?
1) www.pub.gov.lk 2) www.pubad.gov.lk
3) www.pubadmin.lk 4) www.pubadmin.gov.lk

3.மிக அண்மைக் காலங்களில் இலங்கையின் சமாதான நீதவான்களாக செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட அரச துறையினர் யார்?
1)முகாமைத்துவ உதவியாளர் 2)கிராம அலுவலர்
3)பிரதேச செயலாளர் 4)அபிவிருத்தி உத்தியோகத்தர்

4.இலங்கையில் நுகர்வோர் முறைப்பாடு தொடர்பான தகவல்களை தெரிவிப்பதற்கான ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் தொலைபேசி இலக்கம் யாது?
1) 1929 2)1919 3)1956 4)1977

5.இலங்கை ஜனநாயகசோசலிச குடியரசு நாட்டினது வர்த்தமானிப்பத்திரிகை அச்சிடப்படுவது
1)அரசாங்க செய்தி திணைக்களத்தின் மூலமாகும்
2) அரசாங்க அச்சு திணைக்களத்தின் மூலமாகும்
3)அரசாங்க அச்சு கூட்டுத்தாபனத்தின் மூலமாகும்
4)அரசாங்க வெளியீட்டு பணியகத்தின் மூலமாகும்

6.இலங்கையில் கூடியளவு கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள மாவட்டம் யாது?
1) கொழும்பு 2) குருநாகல் 3)கண்டி 4)யாழ்ப்பாணம்

7.ஒவ்வொரு திணைக்களத்திற்கும் எதிரே அந்த திணைக்களம் உள்ளடங்கும் அமைச்சினை சரியாக காட்டாதது பின்வருவனவற்றுள் எது?
1) திவி நெகும திணைக்களம் -பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
2)கிராம அலுவலர் - பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு
3) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் -வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
4)தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம் -உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சு

8.ஐக்கிய நாடுகள் சபையினால் உலக சிறுவர் தினம் மற்றும் சர்வதேச முதியோர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நாள் எது?
1) ஏப்ரல் 5 2) செப்டெம்பர் 16 3) ஒக்ரோபர் 01 4) டிசெம்பர் 10

9.தொலைந்து போன தேசிய அடையாள அட்டையின் பிரதியைப் பெற்றுக் கொள்வதற்காக தற்போது செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் எவ்வளவு?
1) 10 ரூபாய் 2) 15 ரூபாய் 3)20 ரூபாய் 4) 30 ரூபாய்

10.இலங்கையில் அதிக எண்ணிக்கையில் குளங்கள் அமைந்துள்ள மாகாணம்
1)வடமேல் 2)வட மத்தி 3) வடகிழக்கு 4) வட தெற்கு

11.இலங்கையில் நிணநீர் யானைக் கால் நோய் ஒழிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார தாபனத்தினால் வெளியிடப்பட்ட ஆண்டு யாது?
1)2013 2) 2014 3) 2015 4) 2016

12.ஞாயிற்றுத்தொகுதியில் உள்ள மிகவும் குளிர்ச்சியான கோள் எது?
1) செவ்வாய் 2)சனி 3)யுரேனஸ் 4)நெப்டியூன்

13.சர்வதேச ரீதியாக கீர்த்தியை ஈட்டியுள்ள From third world to tirst எனும் நூலின் நூலாசிரியர் யார்?
1) கலாநிதி அப்துல் கலாம் 2) நெல்சன் மண்டேலா
3) மருத்துவர் மகதீர் முகமது 4) லீ குவான் யூ

14. கல்வி சீர்திருத்தத்திற்காக தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டம் நடை பெற்று வரும் லத்தின் அமெரிக்க நாடு
1) சிலி 2) பொலிவியா 3) பிரேசில் 4) ஆர்ஜென்டீனா

15. 2015 ஆம் ஆண்டின் UNDP யின் வருடாந்த அறிக்கைகளுக்கேற்ப 187 நாடுகளின் மனித அபிவிருத்தி சுட்டிகளில் இலங்கைக்கு கிடைத்த இடம்
1) 73 2) 75 3) 78 4) 80

16.உலக மரபுரிமை ஸ்தானங்களாக யுனெஸ்கோ நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இடங்கள் இலங்கையில் எத்தனை உள்ளன?
1) 6 2)7 3) 8 4) 9

17.இலங்கையில்வாக்குரிமைக்குஉரியவாறு18ஆகக்குறைக்கப்பட்டது எந்தவருடத்தில்ஆகும்.
1) 1958 2) 1959 3) 1960 4) 1961

18.தகவல் அறியும் சட்டத்தின் தேவையை இலங்கை அரசியலமைப்பின் எந்தச் சீர் திருத்தம் குறிப்பிடுகிறது.
1) 16 2) 17 3) 18 4) 19

19.எந்த வெளிநாட்டினரால் இந்த நாட்டிற்கு கோப்பிச் செய்கை அறிமுகம் செய்யப்பட்டது?
1) அராபியர் 2) போர்த்துக்கேயர் 3) ஒல்லாந்தர் 4) பிரித்தானியர்

20.அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது?
1) 06 2) 07 3) 08 4) 09

◆21 தொடக்கம் 30வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைக் கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் எழுதுக.

21. 2016 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட குடியகலும் குடும்பங்களுக்கான நலனோன்பு வேலைத் திட்டத்தினது பெயர் யாது?

22.இலங்கையானது குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்ட வருடம் யாது?

23. COP 21 என்பது யாது?

24.போகோஹராம் பயங்கரவாத குழு இயங்கும் நாடு எது?

25.இவ் வருடம் எந்நாட்டில் கைத்தொழில் நாடுகளின் G 7 மாநாடு நடைபெற்றது?

26.இலங்கையில் வீதிகளை அமைப்பதில் முன்னோடியாக விளங்கிய தேசாதிபதி யார்?

27.தற் சமயம் வளி மாசடைதலை கூடுதலாக கொண்ட நகரம் எது?

28.21 ஆம் நூற்றாண்டில் மனித இனம் எதிர் கொள்ளும் முக்கிய பிரச்சினை யாது?

29.தற்போது ஐரோப்பாவிலே மிகவும் கடன்பட்டுள்ள நாடு யாது?

30.தற்போது இலங்கையின் தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்ப வென [illegible] யாது?

## பகுதி-II

◆1,2 ஆகிய ஒவ்வொரு வினாவின் கீழேயும் நான்கு சொற்கள் படித் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று சொற்கள் குறித்தவொரு இயல்பிற்கேற்ப ஒன்றுக்கொன்று சமனான தொடர்பைக் குறித்து நிற்கின்றன.அவ்வாறான சமனான தொடர்பைக் காட்டாத எஞ்சிய சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. 1)மழை 2)வரட்சி 3)பூமியதிர்ச்சி 4)தொற்றுநோய்

2. 1)பலா 2)தென்னை 3)கமுகு 4)பனை

◆3,4 ஆகிய ஒவ்வொரு வினாவின் கீழேயும் A,B,C,D,E,F என்றவாறான ஆறு சொற்கள் படித்தரப்பட்டுள்ளன.அவற்றை ஒரு குறித்த இயல்பிற்கேற்ப சமனான இரு தொகுதிகளாகபிரித்துவகைப்படுத்தமுடியும்.அவ்வாறுஇருதொகுதிகளாகவகைப்படுத்தக்கூடிய முறையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

3. A.பீற்றூட் B.கரட் C.போஞ்சி
D.றாபு E.கோவா f.லீக்ஸ்
1)A,B,E மற்றும் C,D,F 2)A,B,C மற்றும் D,E,F
3)A,D,E மற்றும் B,C,F 4)A,B,D மற்றும் C,E,F

4. A.துவிச்சக்கரவண்டி B.தோணி C. முச்சக்கரவண்டி
D.வண்டில் E. மோட்டார் சைக்கிள் F.படகு
1)A,B,D மற்றும் C,E,F 2)A,D,F மற்றும் B,C,E
3)A,C,E மற்றும் B,D,F 4)A,B,C மற்றும் D,E,F

◆5 தொடக்கம்7 வரையுள்ள வினாக்கள் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் இருந்து புறப்படும் ஆறு புகையிரதங்கள் தொடர்பான கீழேயுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

★மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் காலை 5மணி தொடக்கம் மு.ப 10மணி வரை ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒரு புகையிரதம் என்றவாறு ஒழுங்கு முறை யின்றி அமையுமாறு ராணி,தேவி,மாதவி,காவேரி,மகா,கங்கா என்ற பெயர் களையுடைய ஆறு புகையிரதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு தினமும் புறப்படுகின்றன.

◆ராணி,தேவி,மாதவி என்ற புகையிரதங்கள் கடுகதிப் புகையிரதங்களாவ தோடு எஞ்சிய புகையிரதங்கள் சாதாரண புகையிரதங்களாகும்.

◆அவற்றுள் ஒழுங்குமுறையின்றி கடுகதி புகையிரதங்கள் காலை 5மணி காலை 7மணி காலை 9 மணிக்கும் சாதாரண புகையிரதங்கள் காலை 6 மணி, காலை 8மணி,மு.ப 10மணிக்கும் புறப்படுகின்றன.

◆ராணி என்ற புகையிரதத்தின் பின்னர் தேவி என்ற புகையிரதம் புறப் படுகிறது. அதற்கிடையே புறப்படுவது ஒரு புகையிரதம் மட்டுமேயாகும்.

◆சுங்காஎன்றபுகையிரதத்தின்பின்னர்புறப்படுவதுதேவிஎன்றபுகையிரதமாகும்.

★அனேகன்,அமிலன்,சலீம் மற்றும் சுரேஷ் என்ற நான்கு நண்பர்களுக்கும் கீழே குறிப்பிட்டவாறு இந்தப் புகையிரதங்களில் பயணஞ் செய்கின்றனர்.

◆அமலன்பயணஞ்செய்வது காலை 7மணிக்குபுறப்படும்புகையிரதத்திலாகும்.

◆சுரேஷ் என்பவர் மகா என்ற புகையிரதத்தில் பயணஞ்செய்கிறார்.அது புறப்படுவது மு.ப 10 மணிக்காகும்.

◆அனேகன் பயணஞ்செய்யும் புகையிரதமானது அமிலன் பயணிக்கும் புகையிரத்திற்கு முன்னர் புறப்படுகிறது.

◆சலீம் பயணஞ்செய்யும் புகையிரதம் புறப்படுவது அமிலன் பயணிக்கும் புகையிரதம் புறப்பட்ட பின்னராகும்.


இந்த தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

நிலையத்தில் தினமும் புகையிரதங்கள் புறப்படும் சரியான ஒழுங்குமுறையாக இருக்க முடிவது இவற்றுள் எதுவாகும்?
1)மாதவி,காவேரி,தேவி, சங்கா,ராணி,மகா 2)ராணி,சங்கா,தேவி,காவேரி,மாதவி,மகா
3)ராணி,சங்கா,தேவி,மாதவி,காவேரி,மகா 4)காவேரி,மாதவி,ராணி,சங்கா,தேவி,மகா

6. காலை 6மணிக்கு காவேரி என்ற புகையிரதம் புறப்பட்டால் தேவி என்ற புகையிரதம் எத்தனை மணிக்கு புறப்படும்?
1) காலை 5.00 2) காலை7.00
3) காலை 9.00 4 காலை 7.00அல்லது காலை 9.00

7.அனேகன் பயணிக்கும் புகையிரதம் புறப்பட்ட நேரத்திற்கும் சலீம் பயணிக்கும் புகையிரதம் புறப்பட்ட நேரத்திற்கும் இடையே இருக்கக்கூடிய நேர இடைவெளி எவ்வளவு?
I.இரண்டு மணித்தியாலம் II.மூன்று மணித்தியாலம் III.நான்கு மணித்தியாலம்
1)I ஆவது மட்டுமாகும் 2)II ஆவது மட்டுமாகும்
3)I,II மட்டுமாகும் 4)I,II,III ஆகிய எல்லாம்

◆8 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் 24 சதுரங்களைக் கொண்டமைந்த கீழேயுள்ள நெய்யரி மற்றும் அது தொடர்பான தகவல்களை அடிப்படையாகக்கொண்டவை.




16 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுஅறிவும் நுண்ணறிவும் தொடர்ச்சி...

◆இந்த கோலத்திலே உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சதுரத்திலும் 1 தொடக்கம் 9 வரையுள்ள எண்களுள் குறித்தவொரு எண் ஒன்றுபடி இடப்பட்டு பூரணப்படுத்தப்பட வேண்டும்.

◆இதற்காக அந்தந்த சதுர நிரையிலோ அல்லது நிரலிலோ உள்ளடக்கப்பட்டுள்ள எண்களின் கூட்டுத்தொகை அந்த நிரையில் அல்லது நிரலுக்கு நேர் வெளியேயுள்ள வட்டத்தினுள் காட்டப்பட்டுள்ளது.

◆இங்கு நெய்யரியிலே நிழற்றப்பட்ட பிரதேசத்தினால் வரையறுக்கப்பட்ட சதுர நிரையிலோ அல்லது நிரலிலோ ஒரே எண்ணை ஒன்றிற்கு மேற்பட்ட தடவை இடப்பட முடியாது.

◆இந்த முறைக்கேற்ப இந்தக் கோலத்திலே சில சதுரங்களுக்காக இடப்பட்டுள்ள எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு வேறு சில சதுரங்கள் ஆங்கில எழுத்துக்களினாலோ அல்லது வெறுமையாகவோ உள்ளன.

◆மேலும் இங்கு A,B,C என்ற ஆங்கில எழுத்துக்கள் மூலம் அந்தந்த இடங்களுக்கேற்ப உரிய குறித்த எண்ணொன்றைக் குறித்து நிற்கின்றன.

இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களினால் மட்டும் எழுதுக.


8. A (...............)
9. B (...............)
10. C (...............)

◆கீழுள்ள வினா கீழே காட்டப்பட்டுள்ள உருவப்படங்கள் மற்றும் அது தொடர்பான தகவல்களை அடிப்படையாகக்கொண்டது.


★ கீழேயுள்ள உரு I இல் காட்டப்படுவது சர்வ சமனான சிறிய சதுரமுகிகள் எட்டை ஒன்றாகப் பொருத்தி தயாரிக்கப்பட்ட பெரிய சதுரமுகியொன்றாகும்.

★ அதில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறிய சதுரமுகி பெரிய சதுரமுகியாக படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு கிடைத்தளமாகவும் நிலைக்குத்து தளமாகவும் வலமாகவும் இடமாகவும் முன்னாலும் பின்னாலும் என்ற நான்கு திசைகளிலும் சுழற்றப்படுகிறது.

★ மேலும் அந்தச்சிறிய சதுரமுகியில் வெளியில் தெரியும் முகங்களில் உரு II இல் காட்டிய முறையில் 1 தொடக்கம் 24 வரையான எண்கள் எழுதப்பட்டுள்ளன.




உரு I


உரு II

இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

11.பெரிய சதுரமுகியிலே A என்ற கிடைத்தளத்தில் உள்ள சிறிய சதுரமுகிகள் நான்கும் உரு I இல் அம்புக்குறியினால் காட்டப்பட்ட திசையில் கால் வட்டத்தால் சுழற்றிய பின்னர் கிடைக்கப்பெறும் சதுரமுகியில் K,L,M,N என்ற சிறிய சதுரமுகியின் முகங்களில் தெரியும் எண்கள் யாவை?

| | K | L | M | N |
|---|---|---|---|---|
| 1) | 15 | 7 | 4 | 13 |
| 2) | 13 | 7 | 4 | 15 |
| 3) | 15 | 14 | 8 | 15 |
| 4) | 13 | 14 | 8 | 15 |




◆12,13 ஆகிய ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்தவொரு தொடர்புடன் கூடிய சொற்சோடியொன்று காட்டப்பட்டுள்ளது. அந்த சொற்சோடிக்கிடையே காணப்படும் தொடர்புக்கு மிகவும் கிட்டிய தொடர்பைக் காட்டும் வேறொரு சொற்சோடியைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

12. வைப்பு-வட்டி
1)பரிசு–நன்றிகூறல் 2)பரீட்சை-சித்தியடைதல்
3)தொழில்–சம்பளம் 4)பயிர்ச்செய்கை–அறுவடை,

13. யானைப்பாகன்–அங்குசம்
1)அதிபர்–ஒழுக்கக்குழு 2)வண்டில்–தார்க்குச்சி
3)சாரதி–சுக்கான் 4)ஓவியன்–நிறத்தூரிகை

◆ 14 தொடக்கம் 16வரையுள்ள குறித்த தவணைப்பரீட்சையொன்றில் ஏழு மாணவிகளால் கணித பாடத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் தொடர்பான கீழேயுள்ள தகவல்களைஅடிப்படையாகக் கொண்டவை.

◆சதுர்மதி, சந்திரா, உதயா, ரஞ்சனா, சுவேதா, பிரியா, சர்மிளா என்ற மாணவிகள் ஏழுபேர் தவணைப் பரீட்சையொன்றிலே கணித பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட புள்ளிகள் கீழே காட்டப்பட்டவாறு அமைந்திருந்தன.

★ அதியுயர் புள்ளியைப் பெற்றுக்கொண்ட மாணவியின் புள்ளியானது சந்திரா பெற்ற புள்ளியினது ஐந்து மடங்காகும்.

★ உதயா பெற்றுக்கொண்ட புள்ளியானது சதுர்மதி பெற்றுக்கொண்ட புள்ளியின் நான்கு மடங்காகும்.

★ பிரியா பெற்றுக்கொண்ட புள்ளி 60 உம் சதுர்மதி பெற்றுக்கொண்ட புள்ளி 10 உம் ஆகும்.

★ அதிகூடிய புள்ளியில் இருந்து மிகக்குறைந்த புள்ளி வரை புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஒழுங்கு முறையிலே ஒழுங்கமைக்கும்போது பிரியா இரண்டாவதாகவும் ரஞ்சனா மூன்றாவதாகவும் உள்ளனர்.

★ சந்திரா பெற்றுக்கொண்ட புள்ளி உதயா பெற்றுக்கொண்ட புள்ளிகளை விடக்குறைந்தது

★ சுவேதா என்பவர்மிகக்குறைந்த புள்ளிகளைப் பெற்ற மூவருள் ஒருவராகும்.


இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அத் தெரிவிற்குரிய இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


14.புள்ளிகளை ஒழுங்கமைக்கும்போது சர்மிளாவிற்கு கிடைக்கும் இடம் என்ன?
1) 1 2)4 3)5 4) 6

15.புள்ளிகளை ஒழுங்கமைக்கும் போது சந்திராவிற்கு கிடைக்கும் இடம் என்ன?
1)4 அல்லது 7 2) 5அல்லது 6 3) 5அல்லது 7 4)6 அல்லது 7

16. ரஞ்சனா பெற்றுக்கொண்ட புள்ளி தொடர்பாக நிச்சயமாக உண்மையாக இருக்க முடியாதது இவற்றுள் எதுவாகும்?
1) சதுர்மதி பெற்றுக்கொண்ட புள்ளியைப் போல மூன்று மடங்காகும்
2)சுவேதா பெற்றுக்கொண்ட புள்ளியைப் போல இரு மடங்காகும்
3)சந்திரா பெற்றுக்கொண்ட புள்ளியைப் போல இரு மடங்காகும்
4)சர்மிளா பெற்றுக்கொண்ட புள்ளியைப் போல அரைவாசியாகும்

◆17,18 ஆகிய வினாக்கள் மாகாண சபை தேர்தலொன்றிலே P,Q,R என்ற மூன்று கட்சிகளினால் A,B,C,D,E என்ற தேர்தல் பிரதேசங்கள் ஐந்தில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையைக்குறிப்பிடும் கீழேயுள்ள வரைபுச் சோடிகளை அடிப்படையாகக்கொண்டவை இந்தத் தகவலுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.





17. R என்ற கட்சியினால் அதி கூடிய எண்ணிக்கையிலான வாக்குகள் பெறப்பட்ட தேர்தல் பிரதேசம் எது?
1)B 2)C 3)D 4)E

18. P என்ற கட்சியினால் Q என்ற கட்சியைவிட கூடுதலான எண்ணிக்கையில் வாக்குகள் பெறப்பட்ட தேர்தல் தொகுதி எது?
1)A 2)B 3)C 4)D

◆19,20 ஆகிய வினாக்கள் மும்மைத் தொடையினுள் அடங்கியுள்ள தொடைகள் ஒவ்வொன்றின் இடையேயும் காணப்படும் தொடர்பைக் குறிப்பிடக்கூடிய முறையைக் குறிப்பிடும் கீழேயுள்ள ஐந்து வரிப்படங்கள் மற்றும் அது தொடர்பாக தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.




◆கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் தொடைகள் மும்மைகள் நான்கு தரப்பட்டுள்ளன
◆அவற்றுள் மூன்று மும்மைத் தொடைகள் மட்டுமே இங்கே தரப்பட்டுள்ள மூன்று வரிப்படங்களால் குறிப்பிடப்படமுடியும்.

இந்த முறைக்கேற்ப இங்கு குறிப்பிடப்படும் எந்தவொரு வரிப்படத்தினாலும் குறிப் பிடப்பட முடியாத எஞ்சிய மும்மைத் தொடையை தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

19. 1)அத்தியாயம், பந்தி, வசனம்
2)வைத்தியசாலை, ஆண்தாதி அலுவலர், வைத்தியர்
3)நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம்
4)சட்டத்தரணி, எழுத்தாளர், பாடகர்

20. 1)வருடம், மாதம், கிழமை
2)முழு எண்கள், ஒற்றை எண்கள், சதுர எண்கள்
3)ஆடைகள், சாறி, காற்சட்டை
4)பல்கோணி, முக்கோணிவட்டம்

◆பின்வரும் வினாவின் கீழே ஆரம்பத்திலே குறித்த தொடர்புடன் கூடிய உருவச் சோடி யொன்று தரப்பட்டுள்ளது. அந்த உருவச்சோடிக்கிடையே காணப்படும் தொடர்புக்கு மிகவும் நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவச்சோடியைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

21.

1. 2. 3. 4.

◆22,23 ஆகியஒவ்வொரு வினாவும் குறித்தவொரு நிறுவனம் A,B,C,D,E,F,G,H,I,J என்ற பத்து பிரிவுகளுக்குப் பொறுப்பாக உள்ள அலுவலர்கள் பத்து பேர்களுள் திங்கள் முதல் வெள்ளி வரையேயான ஐந்து நாட்களுள் காலையிலேயே வேலைக்கு வருகை தரும் ஆறு அலுவலர்கள் தொடர்பாக கீழேயுள்ள அட்டவணையில் உள்ளடக்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

| நாட்கள் | காலையிலேயே வேலைக்கு வருகை தந்த அலுவலர்கள் ஆறுபேர் | அந்த அலுவலர்கள் பொறுப்பாகவுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| திங்கள் | தேனுஜா, அமிலன், சிவா, பெருமாள், கோவிந்தன், கருணாகரன் | A,C,B,H,G,D |
| செவ்வாய் | தேனுஜா, அமிலன், விமலன், கருணாகரன், கோவிந்தன், அசூர் | C,D,E,B,G,I |
| புதன் | அசூர், ராஜகோபால், சிவா, அமிலன், தேனுஜா, கருணாகரன் | I,J,A,B,C,D |
| வியாழன் | சிவா, கருணாகரன், அசூர், விமலன், இந்திரா, ராஜகோபால் | A,D,I,E,F,J |
| வெள்ளி | ராஜகோபால், பெருமாள், கோவிந்தன், அசூர், இந்திரா, அமிலன் | J,H,G,I,F,B |

இங்கே ஒவ்வொரு அலுவலர்களுக்கும் பொறுப்பாகவுள்ள பிரிவுகள் காட்டப்பட்டிருப்பதுடன் அந்த அலுவலர்களின் பெயர் குறிப்பிட்டிருக்கும் ஒழுங்கு முறையில் இல்லை. இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரியதெரிவினது இலக்கத்தை வினாவின்எதிரேயுள்ளபுள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

22.கீழேயுள்ள அலுவலர்களுள் அதிக எண்ணிக்கையிலான நாட்களில் காலையிலேயே வேலைக்கு வருகை தந்த அலுவலர் யார்?
1)சிவா 2)தேனுஜா 3)அசூர் 4)இந்திரா

23.D என்ற பிரிவுக்கு பொறுப்பான அலுவலர் யார்?
1)கருணாகரன் 2)தேனுஜா 3)சிவா 4)விமலன்

◆◆◆

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் 7 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியம்

உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல், தலைமுடி உதிர்தல், ஆஸ்துமா, சலரோகம், பாரிசவாதம், குழந்தையின்மை, ஆண் மைக் குறைபாடுகள், தாம்பத்திய திருப்தி யின்மை, மாதவிடாய் குறைபாடுகள், வெள் ளைபடுதல், தழும்புகள் மறைய, முள்ளந் தண்டு நசிவுகள் குணமாக. (5272)

தொடர்பு:- Shan's Health Care, 255, K.K.S. Road, Kokuvil, Jaffna.
T.P: 077 035 7307(முன் பதிவு அவசியம்)


## மரம் நாட்டும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்ட அங்குரார்ப்பணம்

அராலி நிலாவொளி இளை ஞர் கழகத்தினால் சிரமசக்தி வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் "பசுமை யான கிராமம்" என்னும் மர நடுகைத்திட்டம் இன்று வியா ழக்கிழமை பிப.1 மணியள வில் அராலி மத்தி முருக மூர்த்தி வித்தியாசாலையில் ஆரம்பித்து வைக்கப்படவு ள்ளது. இந்த நிகழ்வில் பாட சாலை மாணவர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளதுடன் பாட சாலை வளாகத்தினுள் நிழல் தரும் மரங்களும் நாட்டி வைக்கப்படவுள்ளன. இதனை தொடர்ந்து தொடர்ச்சியாக வலிகாமம் மேற்கு பாடசா லைகள். பொதுமண்டப வளா கங்கள் என பல்வேறு இடங்களிலும் மரங் களை நாட்டும்வேலை த்திட்டமும் மரந டுகை தொடர்பான விழிப்புணர்வு பதா தைகள் காட்சிப் படுத் தலும் இடம்பெறவு ள்ளதாக அராலி நிலா வொளி இளைஞர் கழகத்தினர் தெரி வித்துள்ளனர். (இ-9)


## கண்ணீர் அஞ்சலி

கலாநிதி திரு.தங்கராஜா செந்வரன்



29.08.2016 அன்று
அகால மரணமடைந்த
போதனா வைத்தியசாலை
**வைத்திய கலாநிதி திரு.தங்கராஜா செந்வரன்**
அவர்களுக்கு எமது
கண்ணீர் அஞ்சலியை
செலுத்துவதுடன்
அவருடைய
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

(சீ/5589)

தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் ஊழியர்கள்
நொதேன் சென்றல் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



## 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
அமரர் வி. தர்மலிங்கம்



காலம்:- 02.09.2016 வெள்ளிக்கிழமை
இடம்:- தாவடி நினைவுத்தூபி
நேரம்:- காலை 7.00 மணி
தலைமை: திரு. த.திருஞானசம்பந்தர்
(தலைவர், விழாக்குழு)
நினைவுப் பேருரை:
மாண்புமிகு இரா.சம்பந்தன்
(எதிர்க்கட்சித் தலைவர்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்)

தாவடி நினைவுத் தூபியில் மலரஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூகப் பிரதிநிதிகள் நினைவு அஞ்சலி உரை நிகழ்த்துவார்கள். நண்பகல் 12 மணிக்கு ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மணி மண்டபத்தில் மகேஸ்வரபூசையும் இடம்பெறும். அனைவரையும் சகல நிகழ்வுகளிலும் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சீ-5590)

அமரர் வி.தர்மலிங்கம் நினைவுக்குழு.



## 9ம் மாத நினைவலைகள்



அமரர் மரியாம்பிள்ளை
பிரான்சிஸ் சேவியர்

மலர்வு: 28.11.1936 உதிர்வு:03.12.2015

சிரித்து மகிழ்ந்து உறவாடி வாழ்ந்தவனே!
பசித்த முகம் பார்த்து பண்புடனே பரிமாறி
பார்த்து புன்னகை புரிந்தவனே!
பொல்லா காலனவன்
திருவிளையாட்டின் விளைவால்
அரவணைத்து மகிழ்ந்தவர்கள்
அருகிலிருக்கும் போது
உறவுகள் கதறி துடிக்கும் போது நீர்
வானுறையும் தெய்வத்துள்
சங்கமித்தது ஏனைய்யா!
தேடுகிறது உறவு வாடுகின்றது
உனது குடும்பம்
சுற்றமும் திரும்பி நீர் வரமாட்டாயோ?

987, வளன்புரம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(5778)

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 822

### தர்மா




### நிசாந்தன்




### ராஜீவ்




### ராகுல்

ஹா... ஹா...
மனைவி:உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன்முதல்ல ஐ லவ் யூ சொன்னப்ப நான் திக்கு முக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்
கணவன்:பின்ன ஞாபகம் இருக்காதா, அந்தஒரு மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே கடைசியா நான் மகிழ்ச்சியா இருந்தேன்

### காட்பெயின்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யால தேசிய சரணாலயத்தின் ஒரு பகுதி மூடப்படுகிறது

யால தேசிய விலங்குகள் சரணாலயத்தின் ஒரு பகுதி இன்று முதல் எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதிவரை தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக வனவிலங்குகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இக்காலப்பகுதியில் உள்ளக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதோடு, விலங்குகள் வேறு பிரதேசங்களுக்குச் செல்வதை தடுப்பதற்காக மின்வேலிகளும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 70 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 | 100 | 90 | 120 | 100 |
| தக்காளி | 60 | 20 | 40 | 40 | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 90 | 50 | 80 | 100 | 90 | 60 | 80 |
| கோவா | 80 | 50 | 80 | 80 | 90 | 100 | 100 |
| கரட் | 100 | 100 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பூசணி | 30 | 20 | 20 | 30 | 40 | 50 | 50 |
| புடோல் | 40 | 20 | 20 | 40 | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 70 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 70 | 70 | 80 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 80 | 70 | 130 | 60 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 | 60 | 50 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | — | 110 | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 30 | 90 | 50 | 60 | 50 |
| லீக்ஸ் | 120 | 100 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 20 | 40 | 40 | 40 | 40 | 70 |
| கறிமிளகாய் | 100 | 100 | 90 | 140 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 60 | 100 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 180 | 100 | 140 | 200 | 170 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | 30 | 40 | 50 | 40 | 40 |
| கீரை 1பிடி | 20 | 10 | 20 | 30 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 280 | 250 | 200 | 200 | 200 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-35 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 200 | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 120 | — | — | 140 | 60 | 160 | 100 |
| முள்ளங்கி | 40 | — | 20 | 60 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 40 | 20 | 40 | 60 | 40 | 60 | 60 |

## ஜனாதிபதியின் இணைய விவகாரம்; மாணவனுக்கு மன்னிப்பு வேண்டும்

தன்னை கொல்ல வந்தவர்களை மன்னித்த ஜனாதிபதி அவரது இணையத்தில் தாக்குதல் நடத்திய சிறுவன் தொடர்பிலும் நல்ல முடிவினை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

குறித்த சிறுவனை தண்டிக்காமல் அவனது திறமைகளை வேறு மார்க்கங்களில் பிரயோசனப்படுத்துவது தொடர்பில் சிந்திக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபாலவை கொலை செய்ய வந்த நபருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சிகிரியா ஓவியத்துக்கு சேதத்தை விளைவித்த யுவதிக்கு வழங்கப்பட்ட மன்னிப்பையும் நினைவுபடுத்தியுள்ளார்.

எனவே. ஜனாதிபதியின் இணையத்தில் தாக்குதலை மேற்கொண்ட பாடசாலை மாணவனுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை. இணையம் தொடர்பாக ஜனாதிபதியை தெளிவுபடுத்தும் நோக்குடனே ஜனாதிபதியின் இணையம் மீது தாக்குதல் நடத்தியதாக சந்தேகநபரான 17 வயது மாணவன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## கைதுசெய்யப்பட்ட மாணவன் இதுவரை 37 இணையத்தளங்களில் ஊடுருவல்



ஜனாதிபதியின் இணையத்தளத்தை ஊடுருவி தரவுகளை மாற்றிய குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 17 வயது பாடசாலை மாணவன் இதற்கு முன்னர் இரண்டு அரச இணையத்தங்கள் உட்பட 37 இணையத்தளங்களை ஊடுருவியுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மேல் நீதிமன்ற பிரதம நீதவான் கிஹான் பிலபிட்டியவிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் இதனை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தொடர்ச்சியாக முன்னெடுத்த சிறப்பு விசாரணைகளின் போது Arrow.lk எனும் பேஸ்புக் கணக்கொன்றின் ஊடாக இலங்கையின் 37 இணையத்தளங்கள் ஊடுருவல் செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த பேஸ்புக் கணக்கானது "யக்கடயா போரம்" (yakadaya forum) எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட குழுவொன்றுடன் இணைந்து செயற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

இந்த "யக்கடயா போரம்" மேலதிகமாக ரத்து உகுஸ்ஸா. சுமேதாதன விஜய. கோயா ஹெக்கர் (goyahacker) ஆகிய பெயர்களிலும் பேஸ்புக் கணக்குகள் உள்ளமையும் அவையனைத்தும் இணையத்தள தகவல் ஊடுருவல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதும் கண்டறியப்பட்டன என குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

# தமிழ் சினிமா வரலாறு

## சாவித்திரியுடன் ஜோடியாக நடித்த 'மனம் போல் மாங்கல்யம்'

242

இதன் விளைவாக தேவதாஸ், மனம் போல் மாங்கல்யம் ஆகிய படங்களில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

தேவதாஸ் 11-09-1953இல் வெளிவந்தது. அதில் சாவித்திரிக்கு பெரும் புகழ் கிடைத்தது. அதற்கு சில வாரங்களுக்குப் பிறகு (01-11-1953இல்) வெளிவந்த மனம் போல் மாங்கல்யம் மாபெரும் வெற்றிப்படமாக அமைந்தது.

இரட்டை வேடங்களில் பிரமாதமாக நடித்தார் ஜெமினி கணேசன். இந்தப் படத்தின் மூலம் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்று விட்டார்.

சாவித்திரியும் அருமையாக நடித்திருந்தார். ஏற்கனவே தேவதாஸ் மூலம் புகழ் பெற்றிருந்த அவர் இப்படத்தின் மூலம் மேலும் மேலும் புகழ் பெற்றார்.

அது மட்டுமல்ல ஜெமினி கணேசனும் சாவித்திரியும் பொருத்தமான ஜோடி என்று ரசிகர்கள் ஒருமனதாகப் பாராட்டினார்கள். அதனால் அவர்கள் இருவரையும் ஜோடியாக நடிக்க வைக்க பட அதிபர்கள் போட்டியிட்டார்கள்.

### ஏவி.எம்மின் பெண்

இதற்கிடையே ஏ.வி.எம்மின் தயாரிப்பான "பெண்" படத்தில் ஜெமினி கணேசன் நடித்து வந்தார். இதில் ஜெமினிதான் கதாநாயகன். வைஜந்தி மாலாவும் அஞ்சலிதேவியும் இரண்டு கதாநாயகிகள். எஸ்.பாலசந்தர் ஜெமினியின் நண்பராக நகைச்சுவை வேடத்தில் நடித்தார். முடிவில் அஞ்சலியை ஜெமினியும் வைஜந்தியை பாலச்சந்தரும் மணப்பார்கள். (இந்தக் காலகட்டத்தில் எஸ். பாலசந்தர் வீணை வித்துவான் ஆகவில்லை. நடிகராகவும் டைரக்டராகவும் விளங்கினார்)

1954ஜூன் 25ஆம் திகதி பெண் வெளி வந்தது. ஏற்கனவே பிரபலமாகியிருந்த வைஜந்தி மாலா, அஞ்சலிதேவி ஆகியோருடன் சேர்ந்து நடித்ததால் ஜெமினிகணேசனின் புகழ் மேலும் உய்ந்தது.

1955ஆம் ஆண்டு ஜெமினி கணேசன் வாழ்க்கையில் முக்கியமானது. அந்த ஆண்டில் 6 படங்களில் ஜெமினி நடித்தார். அவற்றில் மிஸ்ஸியம்மா, கணவனே கண்கண்ட தெய்வம் ஆகியவை மெகா ஹிட் படங்கள். அத்துடன் ஜெமினியின் வாழ்க்கையில் சாவித்திரி இடம்பெற மிஸ்ஸியம்மா வழி வகுத்தது.

மிஸ்ஸியம்மா விஜயா புரொடக்ஷன்ஸ் சார்பில் நாகிரெட்டியும் சக்ரபாணியும் தயாரித்த படம். கதையை



எழுதியவர் சக்ரபாணி. திரைக்கதை எழுதி டைரக்ட் செய்தவர் எல்.வி.பிரசாத். வசனம், பாடல்கள் தஞ்சை ராமய்யா தாஸ். இசை ராஜேஸ் வரராவ்.

### பானுமதி

இதில் கதாநாயகியாக நடிக்க முதலில் ஒப்பந்தம் ஆனவர் பானுமதி. ஜெமினியும் பானுமதியும் நடித்த சில காட்சிகளும் படமாக்கப்பட்டன. ஆனால் பானுமதிக்கும் பட அதிபருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் பானுமதி விலக்கிக் கொண்டார். அவருக்கு பதில் சாவித்திரி ஒப்பந்தமானார்.

### கதை

மிஸ்ஸியம்மா கதை நகைச்சுவை இழைந்தோடும் அருமையான காதல் கதை.

ஆண்டிப்பட்டி ஜமீன்தார் கோபாலபிள்ளை (எஸ்.வி. ரங்கராவ்) ஒரு பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார். அந்தப் பள்ளிக்கூடத்துக்கு ஒரு ஆசிரியரும் ஒரு ஆசிரியையும் தேவைப்படுகிறார்கள்.

தம்பதியராக உள்ள ஆசிரியரும் ஆசிரியையும் தேவை என்று விளம்பரம் செய்யப்படுகிறது.

பட்டதாரியான பாலு (ஜெமினிகணேசன்) வேலை இல்லாமல் திண்டாடும் இளைஞன்.

மேரி(சாவித்திரி) ஒரு ஆசிரியை. பெரிய இடத்து சிறுமிக்கு பாடமும் சங்கீதமும் கற்றுத் தருகிறாள். மாணவியின் தந்தை வெளியூருக்கு மாற்றலாகிச் சென்றுவிடுவதால் மேரிக்கும் வேலை போய்விடுகிறது.

இந்த நிலையில் பாலுவும் மேரியும் சந்திக்கிறார்கள். ஜமீன்தார் கொடுத்த விளம்பரத்தை பார்க்கிறார்கள். கணவன்- மனைவியாக நடித்து அந்த வேலையில் சேருகிறார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16 ஆம் திகதி நிறைவு பெறும் செல்வச் சந்நிதி ஆலய மஹோற்சவத்திற்கான ஏற்பாட்டுக் கூட்டம் கடந்த 25 ஆம் திகதி தொண்டைமானாறு தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் எமது பிரதேசத்திற்குட்பட்ட பல்வேறு திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என பிரதேச செயலாளர் ஆர்.ரி. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

அவையாவன,

ஆலயத்திற்குவருகைதரும் பக்த அடியார்கள் கலாசார உடையுடனும் ஒழுக்கசீலர்களாகவும் வழிபாட்டில் ஈடுபட வேண்டும்.

மஹோற்சவ காலங்களில் வெளியிடங்களில் இருந்து வரும் திருடர்களின் நடமாட்டம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பக்த அடியார்கள் தங்க ஆபரணங்கள் அணிவதை இயன்றளவு தவிர்க்க வேண்டும்.

இவ்வருடம் வலிகாம பகுதியில் இருந்து அச்சுவேலிப் பாதை ஊடாக வரும் பக்த அடியார்களுக்கான தனியார் போக்குவரத்துச் சேவைக்கான தரிப்பிடம் பிரதான பாலத்திற்கு அண்மையில் தொண்டைமானாறுப் பகுதியில் அமைக்கப்படும்.

மஹோற்சவ காலத்தை முன்னிட்டு புதிய நபர்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டால் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

மஹோற்சவ காலத்தில் பச்சை குத்துதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச்சூழலில் உள்ள மடங்களில் ஒலிபெருக்கிப் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச்சூழலில் சிகரெட், மதுபானம், புகைத்தல் பொருட்களின் பாவனை, போதை வஸ்துப் பொருட்களின்பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தம் சேவைகளை மேற்கொள்ளும் பொருட்டு பருத்தித்துறை பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், வல்வெட்டித்துறை நகரசபை என்புவற்றின் உற்சவ காலப் பணிமனைகள்கோயில் வளாகத்தில் இயங்கும்.

மஹோற்சவம் ஆரம்பமான நாள்முதல் தினமும் 30 பொலிஸாரும் இறுதி 4 நாட்களும் மேலதிகமான பொலிஸாரும் கடமையில் ஈடுபடுவார்கள். வீதிக்கடவைகளிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுவார்கள்.

கடைகள் வழங்கப்படும் காணிகளுக்குள்ளேயே அமைக்கப்படவேண்டும். வீதியோரங்களில் கடைகள் அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

குளிரூட்டப்பட்ட ஒரு லீற்றர் சோடாவுக்கு 5 ரூபாவும் ஒரு லீற்றருக்கு மேல் 10 ரூபாவும் அறவிடப்படவேண்டும்.

ஆலயம் மடங்களின்பணிகளின் நிமிர்த்தமாக செல்வோருக்கான பாஸ், கிராம உத்தியோகத்தர், வல்வெட்டித்துறை நகரசபை ஊடாக வழங்கப்படும் எனஅவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-7)



# வள்ளிக்கொடி முளைத்தெழும் அற்புத நிகழ்வுடன் கொடியேறித் தொடங்கும் சந்நிதியான் மஹோற்சவம்

தொண்டைமானாறு செல் வச் சந்நிதியானுடைய ஆல யத்தில் நடைபெற்று வருகி ன்ற வழிபாட்டு முறைகளும் பூசை விழாக்களும் இந்த மண் ணிற்கே உரியதான தமிழர்க ளுடைய புராதன பாரம்பரி யங்களை எடுத்தியம்புவதாக அமைந்திருக்கின்றன.

புராதன வழிபாட்டு முறை களுக்குள்ளேயிருந்த நம்பிக் கையினதும், பக்தியினதும் காரணமாக தெய்வீக சக்திக ளி டமிருந்து அற்புதம் நிறை ந்த வெளிப்பாடுகள் அவ்வப் போது தோற்றுவிக்கப்பட்டன.

இதனாலேயே பல ஆல யங்களினதும் அவற்றில் உறைந்தருளும் இறைவர் களதும் அருட்திறன்கள் இற்றை வரை இந்த மண்ணின் கண் மகிமை மிகுந்த அம்சங்களாக அமைந்துள்ளன.

இவ் வகையில்தான் செல் வச் சந்நிதியானுடைய ஆல யத்தில் நிகழப் பெற்று வரும் பூசைகள், விழாக்கள் என் பன பாரம்பரியப் பெறுமா னங்களைக் கொண்ட அம் சங்களாக நிகழப் பெற்று வரு கின்றன.

சந்நிதி ஆலயத்தின் மஹோற்சவத்தை பொறுத்த வரையில் இங்கு கொடித்தம் பம் அமைந்திருக்கவில்லை. அது போல ஆகம முறைப் படியாக கொடியேற்றத்திற் கான மஹோற்சவக் கிரியை களும் இடம் பெறுவதில்லை.

ஆனாலும் வருடாந்த உற் சவத்தை வெளிப்படுத்தும் அடை யாளமாக தாமாகவே முளைத் தெழும் வள்ளிக் கொடியின் தோற்றப்பாடும் அதனைத் தொடர்ந்து பூர்வபட்ச பிரதமை திதி கூடும் வேளையில்கொடி யேற்றச்சடங்கு களும் நிகழப் பெறும்.

வைரவப் பெருமானுக்கு காப்புக் கட்டுதலுடன் பிள்ளை யார் பூசை, வேலவர் பூசை என்பன நிகழப்பெற்று கொடி யேற்றத்திற்கான பூசை நிக ழப்பெறும்.

ஆலய வாசலின் மூலஸ் தானத்தை நோக்கியவாறு அமர்ந்துள்ள நந்திக்கு முன் பாக வைக்கப்படும் கேடகம் இக் கொடியேற்ற வைபவத் தில் பிரதான இடத்தை பெறு கின்றது.

இக் கேடகத்தின் கலசத் தில் தெற்பை ஏழு மாவிலை கள் வைத்துப் பட்டுத்துண்டு கட்டி பூசை இடம் பெறும். இது கலச பூசை என்று சொல்லப் படுகிறது.

இவ்வாறு கலச பூசை நிறைவடைந்ததும் அக்கல சங்கள் கேடகத்தின் மேல் விதானத்தில் வைக்கப்பட்டு வேற் பெருமானுக்கு பூசை கள் ஆரம்பமாகும்.

இவ்வாறு நடைபெறும் பூசைகள், சடங்குகளைத் தொடர்ந்து எழுந்தருளி வேல வருக்கும் விசேட பூசைகள் நிகழப் பெற்று அதே கேடகத் தில் வேலவர் வீதி உலா வரு வார்.

அத் தருணம் ஆலயத் தின் முகப்பில் சேவற் கொடி ஏற்றப்படும் நிகழ்வு இடத் பெறும். சுவாமி உள் வீதியை சுற்றி வருகின்ற நேரத்தில் வள்ளியம்மன் வாசலுக்கு வந்து விசேடமாக தீர்த்தக் குளத்தில் இருந்து நீரெடுத்து நிறைகுடம் வைத்து தீவட்டி பிடித்து வள்ளியம்மனுக்கும் , வேலவருக்கும் பூசைகள் இடம் பெறும்.

இப் பூசைகள் முடிந்ததும் சுவாமி வெளிவீதியுலா வந்து மீண்டும் வடக்குப்புறக் கதிர் காம வாயிலூடாக இருப் பிடத்தை வந்தடைவார்.

இவ்வாறு பழம்பெரும் பாரம்பரியங்களும், சடங்கு முறைகளும் நிறைந்ததாக எம்பெருமான் சந்நிதி வேல வருடைய கொடியேற்றச் சடங்கு அமைந்து விளங்கு கிறது.

துரை கணேசமூர்த்தி
ஆசிரியர், சந்நிதி வசந்தம்

## 'துயர் துடைப்பாய் வேலவா'

ஆற்றங்கரைதனில் வீற்றிருக்கும் சந்நிதி வாழ்வேலவா!
அருள் வேண்டி வருவோர்க்கு வரமருளும் வேலவா!
அடியவர்க்கு அமுதளிக்கும் அன்னதானக் கந்தா!
ஆறுபடை வீடுடைய அழகா!
ஆறுதலை எமக்களிப்பாய் ஆறுமுக வேலவா!
அல்லற்படும் எம் மக்களுக்கு கொடியேற்றித்
துயர் துடைப்பாய் வேலவா!

நயினை விசு - இராசநாயகம்

## 'இடர் களையும் இனியவனே'

ஆற்றங்கரையினிலே அமர்ந்திருந்து
ஆடும் மயில் மீது ஏறி வலம் வந்து
ஆறாத்துயர் தீர்க்கும் சந்நிதியானே
ஆரோகணக் கொடி ஏறுதய்யா - உன்
சந்நிதியில்
இடர் களையும் இனியவனே! முருகா - நீ
ஈய்ந்திடுவாய் அருள் காட்சி அனுதினமும்
உன் அடியே சரணம் என அடைந்தோர்க்கு
ஊற்றெனவே புரிந்திடுவாய் அருள் மழையை
எத்தனை தான் துன்பங்கள் நேரிடினும்
ஏறு மயில் ஏறி வந்தே காத்திடுவாய்
ஐயப்பன் மகனே நீ ஆறு முகனே
ஒப்பில்லா அருளால் ஓடிவந்தோம்-இடர் களைவாய்

வல்லிபுரம்- மார்க்கண்டு



நேற்று முன்தினம் மாலை நல்லூர்க் கந்தன் ஆலய வீதியை சுற்றி கூர்மையான இரும்பு ஆணியாலான பாதணி அணிந்து முருக பக்தர் ஒருவர் நடந்து சென்றார்.

# போதைப்பொருள் விற்பனையை யாழில் நிறுத்தக் கோரிக்கை


## ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்து

போதைப் பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் எட்டாவது மாவட்ட நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குதிறந்தவெளி அரங்கில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் போதையுடன் மதுபானம், சிகரெட் போன்ற சகல பொருட்களின் விற்பனையையும் நிறுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய அன்றைய தினம் மதுபான நிலையங்களை மூடுவதற்கும் சிகரெட் சுருட்டு போன்ற போதைப் பொருள் சார்ந்த பொருட்களை யாழ்ப்பாணத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் யாழ். வணிகர் கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே இக் கோரிக்கைக்கமைவாக மேற்படி போதைப் பொருள்சார்ந்த பொருட்களை 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விற்பனை செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகச் செய லாளர் அறிவித்துள்ளார்.(இ-7-10)

# அவசர சிகிச்சைப் பிரிவில் ஹிருணிகா



பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர விற்கு அவசர சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அவர் கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் அவரது நோய் தொடர்பாகவோ எதற்காக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வுள்ளது என்பது தொடர் பிலோ தகவல்கள் வெளியாகவில்லை என்றும் குறித்த சிங்கள ஊடகம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்களிடம் மன்னிப்பு கோரினார் சேரன்



அன்பு இலங்கைத்தமிழ் சகோதரர்கள்அனைவருக்கும் வணக்கம்

முதலில் இவ்வளவு காலம் என்னை சகோதரனாக ஏற்றமைக்கு (எனக்கு எந்த தகுதியும் இல்லாமல்) நன்றி நீங்களும் இன்னும் சில பல சகோதரர்களும் விமர்சனம் என்ற பெயரில் என்னைப்புகழ்ந்த எல்லா வார்த்தைகளையும் மனமார ஏற்றுக்கொள்கிறேன்..

காலம் எனக்கு சில உண்மைகளை என் கண்முன் காட்டியிருக்கிறது. என்னை புரிந்து கொண்டவர்கள் என் சொந்தங்கள்.என்னை தவறாக எடுக்க மாட்டார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து பேசிய எனக்கு. என்னைப்பிடிக்காதவர்கள் சிலர், என் திரைப்படங்களை பிடிக்காதவர்கள் சிலர் ஒரு மேல்பூச்சுக்காக என்னை சகோதரன் என அழைத்திருக்கிறார்கள் என இப்போது உணர்த்தியிருக்கிறது.

கடந்த 5 நாட்கள் நான் உள்நோக்கமில்லாமல் சொன்ன வார்த்தைகளுக்கு பதிலாக என் மேல் மானாவாரியாக புழுதிவாரி இறைத்ததில் இருந்து புரிந்து கொண்டேன்.உங்களின் உண்மையான அன்பை நான் பெற்றிருந்தால் தவறே செய்திருந்தாலும் ஒரு வாய்ப்பை கொடுத்து நான் என்ன பதில் சொல்கிறேன் என கேட்டிருப்பீர்கள். அதற்கெல்லாம் அவகாசம் கொடுக்காமல் அடிச்சு நொறுக்கிட்டிங்க பரவாயில்லை. ஆனால் உலகம் முழுதும் பரவிக்கிடக்கும் மிச்ச சொந்தங்கள் அமைதிகாத்தும் ஆறுதல் சொல்லியும் புரிதலான கடிதங்களை அனுப்பியும் என்னை எல்லோரும் தவறாக நினைக்கவில்லை என்ற நம்பிக்கை கொடுத்திருக்கிறார்கள்..

சில அமைப்புகள் "இனிமேல் இலங்கைத்தமிழர்கள் முறைகேடாக DVD வியாபாரம் செய்வதை நிறுத்தவேண்டும்" என செய்தி விடுப்பதாக கூறியிருக்கிறார்கள்.. இப்போது எனக்கு கோபமில்லை:. இதை வைத்து சிலர் குளிர்காய நாமே காரணம் ஆகிவிட்டோம் என்ற வருத்தம்தான்..

என் முதுகிலும் மார்பிலும் என் குழந்தைகள்.என் சகோதரர்கள் ஏறி விளையாடியதாக எடுத்துக்கொள்கிறேன்.அதே நேரம் இதை தூக்கி எறிந்து விட்டு வேலை செய்யலாம் என்றால் மனசு அப்படி போலியாக செயற்பட மறுக்கிறது.எனவே உங்கள் வருத்தம் களைந்து என் நிம்மதி தேடுவதே சரி எனப்பட்டதால் இதை எழுத நேர்ந்தது. நீங்கள் அதாவது விமர்சனம் செய்த அனைவரும் வார்த்தைகளை வெளிப்படுத்திய விதமே என்னை கோபம் கொள்ள வைத்தது.

ஏனென்றால் நம் உணர்வுகளை இதுவரை மதிக்காத நடிகரின் படத்திற்கு நம் மக்களில் பலர் திரையரங்கில் பாலாபிஷேகம் செய்கிறார்கள்.. உங்களோடு வளர்ந்த ஒருவனுக்கு (நீங்கள் என்ன கிழிச்சீங்க எங் களுக்காக என கேட்டாலும்) ஒரு வாய்ப்பு கூட கொடுக்காமல் ஏதோ எதிரியின் கூடாரத்தில் வளர்ந்தவன் போல வசைமழை பொலிந்துவிட்டீர்கள்

உலகெங்கும் வாழும் இலங்கைத்தமிழர்கள் மனம் புண்பட்டிருந்தால் என்னை மன்னிக்கவும். அதேபோல என்னை உணர்ந்து அமைதிகாக்கும் ஆதரவு அளிக்கும் அனைத்து இலங்கைத் தமிழர்களுக்கும் என் வணக்கத்தை தெரிவிக்கிறேன் என்பதை கடிதமாய் எழுதுகிறேன். நான் யாரை தலைவர் என்று சொல்வேனோ அவர் இருந்திருந்தால் அவர் சொல்லியிருப்பார் சேரன் நம்மளோட ஆளுன்னு. அவர் இல்லாத இழப்பு தெரிகிறது.எனக்கும் இலங்கைக்கும் என்ன தொடர்புன்னு யாருக்கும் தெரியாது. தெரியவும் வேணாம்.

ஒரு வேண்டுகோள். தயவு செய்து இன்னொருமுறை இது போல் வேறு ஒருவருக்கு நடக்க வேண்டாம். ஏற்கனவே கத்தி பட பிரச்சினையில் எந்த கார ணங்களும் இன்றி உண்மையறியாமல் உடனே அண்ணன் சீமானை திட்டித் தீர்த்தீர்கள்.. அவ்வளவு தூரம் உங்களோடு வந்த சீமான் அண்ணனுக்கே அந்த நிலை. இப்போ அவர் உண்மை தெரிந்தது அனைவருக்கும் இனியும் அதுபோல் தொடரவேண்டாம். இனி பேச ஒன்றும் இல்லை. உங்கள் அனைவருக்கும் என் கடைசி வணக்கம்.தவறை சுட்டிக்காட்டாத நண்பன் ஒரு குவளை விஷத்துக்கு சமம் என அறிஞன் சொல்லியிருக்கிறான். நான் நமக்குள் இருக்கும் கூட்டத்தால் நமக்கு கிடைக்கும் கெட்ட பெயரை தடுக்கவே சொன்னேன்..

"அகதிகள்" என்ற அடையாளமே நம் வலியாக மிஞ்சிவிட்ட நிலையில் மேலும் சில பெயர்கள் வேண்டாம் என்ற எண்ணத்தில் சொன்னது அது என மீண்டும் பதிவிடுகிறேன்.மீண்டும் உங்கள் அனைவரிடமும் மன்னிப்பு கேட்டு உங்களை சமாதானம் செய்து நான் அமைதியாகிறேன்.. நன்றி அனைவருக்கும். "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" நம் முன்னோர் வள்ளுவனார் சொன்னது என் மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஐ.நா.மனித உரிமைக்கூட்டத்தில் இலங்கைக்கு 264

## எதிரான அமெரிக்கத் தீர்மானம் வெற்றி

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனிதவுரிமை சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் இந்தியா உட்பட 25 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

அமெரிக்கா தீர்மானம்

சுவிட்ஸர்லாந்து நாட்டில் உள்ள ஜெனீவா நகரில் நடைபெற்று வரும் 47 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. மனித உரிமை சபைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்தது.

அந்தத் தீர்மானத்தில் இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் எல்லா உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் பெற்று வாழ்வதை அந்த நாடு உறுதி செய்ய வேண்டும் என்றும் மனித உரிமைகள் மீறப்படு வதும் நீதித்துறைக்கு விடு விக்கப்படும்அச்சுறுத்தல்களும் ஊடகங்களுக்கு வரும் மிரட்டல்களும் தடுத்து நிறுத்தப்பட வேண் டும் என்றும் கூறப்பட்டிருந்தது.

இது தவிர இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதை வலியுறுத்தும் அம்சங்களும் தீர்மானத்தில் இடம் பெற்றிருந்தன.

திருத்தங்கள்

வரைவு தீர்மானத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. கடைசி நேரத்தில் இந்தியாவின் சார்பிலும் சில திருத்தங்கள் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தீர்மானத்தின் இறுதி வடிவம் 21-03-2013 அன்று காலை ஐ.நா. மனித உரிமை சபைக் கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டது. தீர்மானத்தின் மீது பேசிய அமெரிக்க தூதர் எலீன் சாம்பர்லியன் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி கவலை அதிகரித்து வருவதாகவும் இதற்குத் தீர்வு காணவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக்வும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு அந்த நாட்டின் அரசுக்கு உள்ளது என்றும் கூறினார்.

இலங்கை எதிர்ப்பு

மேலும் தீர்மானத்தின் மீது பல்வேறு நாடுகளின் உறுப்பினர்களும் பேசினார்கள். தீர்மானத்தின் மீதான விவாதத்தில் இந்தியாவின் பிரதிநிதி திலிப் சின்ஹா பேசுகையில், இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் ஏற்பட்ட உயிர் இழப்புகள் பற்றிய புகார் மீது சுயேச்சையான மற்றும் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்.

இலங்கை பிரதிநிதி மகிந்த சமரசிங்க பேசுகையில், தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்தார். அமெரிக்க தீர்மானம் தங்கள் நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதாக உள்ளது என்பதால் அதை நிராகரிப்பதாகவும் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

வாக்கெடுப்பில் வெற்றி

உறுப்பினர்களின் விவாதத்திற்குப் பிறகு தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்தது.

மொத்தம் உள்ள 47 வாக்குகளில் அமெரிக்காவின் ஆதரவாக 25 வாக்குகள் கிடைத்ததால் தீர்மானம் பெருவாரியான ஆதரவுடன் நிறைவேறியது. தீர்மானத்திற்கு எதிராக 13 வாக்குகள் கிடைத்தன. 8 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன. ஒரு நாட்டின் பிரதிநிதி வாக்களிக்க முடியவில்லை.

இந்தியா ஆதரவு

இதில் தீர்மனத்திற்கு ஆதரவாக இந்தியா, அமெரிக்கா, ஆர்ஜெண்டீனா, ஆஸ்திரியா, பிரேசில் ,சிலி, கோஸ்டாரிகா, ஐவரிகோஸ்ட், செக் குடியரசு, எஸ்டோனியா ஜெர்மனி, கௌதமாலா அயர்லாந்து, இத்தாலி லிபியா, பெரு, போலந்து தென்கொரியா, மால்ட்டோவா, ருமேனியா, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து உட்பட 25 நாடுகள் வாக்களித்தன.

பாகிஸ்தான், கொங்கோ மாலைதீவு, தாய்லாந்து, ஐக்கிய அரபு குடியரசு, கட்டார், குவைத், ஈக்வடோர், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் உகண்டா, வெனிசுலா உட்பட 13 நாடுகள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன. அங்கோலா, போட்ஸ்வானா, எதியோப்பியா, ஜப்பான், கஜகஸ்தான், கென்யா மலேசியா உள்ளிட்ட 8 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் புறக்கணித்தன.

மேற்கு ஆபிரிக்க நாடான கப்போனும் ஐ.நா. மனித உரிமை சபையில் உறுப்பினராக உள்ளது. ஆனால் அந்த நாட்டுக்கான வாக்குரிமையில் பிரச்சினை இருப்பதால் அந்த நாட்டின் பிரதிநிதி வாக்களிக்க முடியவில்லை.

இனப்படுகொலை இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களைப் போர் குற்றங்கள் என்றும் இனப்படுகொலை என்றும் அறிவிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. மேலும் அங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி சர்வதேச அளவில் சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால் அந்தத் திருத்தங்கள் எதுவும் இடம் பெறாமலேயே அமெரிக்க தீர்மானம் நிறைவேறியது.

வடக்கு மாகாண தேர்தலில் தமிழ் தேசிய கூட்டணியைக் கைப்பற்றியது. புதிய முதலமைச்சராக சி.வி. விக்னேஸ்வரன் பதவியேற்றார்.

இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வடக்கு மாகாணத்தில் கடந்த 25 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக 21-09-2013 அன்று தேர்தல் நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் மையப்பகுதியாகத் திகழ்ந்த இந்தப் பகுதியில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தலாக இது கருதப்பட்டது.

மொத்தம் உள்ள 38 உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டணி கட்சிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணிக்கும் இடையேதான் முக்கிய போட்டி நடைபெற்றது.

தமிழர் கட்சி அமோக வெற்றி

வாக்குப்பதிவு முடிந்தவுடனேயே தொடங்கிய வாக்கு எண்ணிக்கையில் எதிர்பார்த்தபடியே தபால் வாக்குகள் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்த் தேசிய கூட்டணி அதிக வாக்குகள் பெற்று முன்னிலையில் இருந்து வந்தது. (தொடரும்)



இலங்கை பிரச்சினை தொடர்பாக சென்னை மெரினா கடற்கரையில் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவ-மாணவிகள் தொடர் முழக்க போராட்டத்தில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனச்சாட்சிக்கு ஒப்பான கடமையை சூழ்நிலையை அனுசரித்துச் செய்.
-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தீர்த்தத் திருவிழா அருளைக் குறிக்கும் பான் கீ மூனின் வருகை எதைக் குறிக்கும்?

இன்று நல்லூரானுக்கு தீர்த்தோற்சவம். பஞ்ச கிருத்தியங்களை உணர்த்துவதாக நடைபெறும் மஹோற்சவத்தில் தீர்த்தத் திருவிழா அருளலைக் குறிப்பதாகும்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன பஞ்சகிருத்தியம் என்று சொல்லப்படும் ஐந்தொழிலாகும்.

ஜீவராசிகளின் பொருட்டு தனு, கரண, புவன, போகங்களைத் தந்தருளிய பரம்பொருள் ஐந்தொழிலைப் புரிவதன் மூலம் இந்தப் பிரபஞ்சத்தை இயக்குவதாக இந்து சமயம் போதிக்கின்றது.

ஒரு சமயத்தின் தத்துவார்த்தங்களை பிற சமயத்தவர்களும் அறிந்திருப்பது நல்லது என்ற அடிப்படையில் மேற்போந்த விடயம் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இப்போது நாம் சுஹ வந்த விடயத்திற்கு வரலாம். உலகம் முழுவதிலும் தன் அடியார்களைக் கொண்டுள்ள நல்லூர்க் கந்தப்பெருமானுக்கு இன்று தீர்த்தோற்சவம். அடியார்களுக்கு கந்தப்பெருமான் தன் அருளாட்சியை வழங்குகின்ற நாள் இன்று.

இந்த நாளில் ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவது ஒரு முக்கியமான விடயமாகும்.

ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவை என்பதாலும் நல்லூர்க் கந்தப்பெருமானின் அருளல் தினமாகிய தீர்த்தோற்சவத்தன்று ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் யாழ்ப்பாணம் வருவதும் குறித்துரைக்கக் கூடிய சிறப்பு அம்சமாகும்.

இவை ஒரு புறம் இருக்க, யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற ஐ.நா பொதுச் செயலாளர் எதற்காக வருகிறார் என்ற கேள்வி தமிழ் மக்களின் மனங்களில் இருக்கவே செய்கிறது.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் மக்கள் சொல்லொணாத்துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

தமிழன் என்றால் கண்டபாட்டில் சுட்டுத்தள்ளு என்று படையினருக்கு உத்தரவிட்ட ஆட்சியாளர்கள் இருந்த மண் இது.

இந்தக் கொடூரத்தால் இந்த மண்ணில் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்தினால் அந்தச் சம்பவங்கள் தொடர்பில் மீட்டல் செய்தால் உலகில் மிக மோசமான இன வக்கிரகம் கொண்ட நாடு இலங்கை என்ற முடிவுக்கு வரமுடியும்.

அந்தளவுக்கு பெரும்பான்மை இனம் சார்ந்த புத்திஜீவிகளும் மத பீடங்களும் அரசியல் தலைமைகளும் படைத்தரப்புகளும் தமிழ் மக்களை எப்படியாவது இந்த நாட்டிலிருந்து அழித்தொழிக்க வேண்டும் என்ற மிக மோசமான வன்மத்துடன் செயற்பட்டனர்.

இதன் விளைவுதான் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்பாகும். உலக வரலாற்றில் மனிதப் பேரவலம் நடந்த இடங்களில் ஒன்றாக முள்ளிவாய்க்காலும் பதிவாகிக் கொண்டது.

இருந்தும் இன்று வரை தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில் ஐ.நா சபை எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். அதாவது தமிழ் மக்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுக்கவில்லை என்பதன் ஊடாக, தமிழ் மக்களின் உயிருக்கு இன்னமும் ஓர் உத்தரவாதத்தை ஐ.நா செய்துதரவில்லை என்று சொல்வதே பொருத்துடையதாகும்.

இந்நிலையில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் இன்று யாழ்ப்பாணம் வருவது தமிழ் மக்களுக்கு உரிமை தருவதற்காக என்று தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

ஆக, நல்லூர் முருகன் அருள் தர அதன் வழி ஐ.நா செயலாளர் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தர ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பார் என நம்புவோம்.

## விசேட கூட்டம்

யாழ். நாரந்தனை கணேச வித்தியாலயத்தின் நூற்றாண்டுவிழா செப்டெம்பர் மாதம் 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இவ்விழா ஒழுங்கமைப்புத் தொடர்பான விசேட கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன விரும்பிகள் தவறாது பங்கு பற்றி விழா ஏற்பாடுகள் மற்றும ஒழுங்கமைப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்கியுதவுமாறு பாடசாலை அதிபர் திருமதி பி.சற்குணராசா கேட்டுள்ளார். (இ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெமுத்துக் கழகத்தின் 31 ஆவது நிறைவு பொதுக் கூட்டம் எதிர்வரும் 04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப3.30 மணிக்கு கழக மண்டபத்தில் கழக தலைவர் வ.சிவச்சந்திரதேவன் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவுகள் நடைபெறுவதோடு எதிர்கால திட்டங்களும் ஆராயப்படும். 30.09.2015இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையினை கழகத்தில் பார்வையிடலாம்.

இக் கூட்டத்தில் கழக பழைய மாணவர்கள், கழக உறுப்பினர்கள் மற்றும் கழகத்தால் பயன்பெற்ற அனைவரையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி கழக தலைவர் வ.சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார். (இ-7-10)

## நல்லூர்க்கந்தனுக்கு



**ஈசனே நல்லை வாசனே**

**பல்லவி**

ஈசனே நல்லை வாசனே, கதிரேசனே முருகேசனே

**அனுபல்லவி**

நேசமாய் உன்திரு வாச மலரடி
நித்தம் மனச் சுத்தத்தொடு
பத்திசெய்து பாடிப் பணிந்தோம் (ஈசனே)

**சரணங்கள்**

குமரேசனே சர்வேசனே
கோடி சூர்யப் பிரகாசனே
குஞ்சரி தெய்வானை வந்தடிதொழு குகனே
நற்றவர் அகனே சற்குருவே நீதஞ்சம்
ஓடியெம் மனம் உழலுதே
உமைபாலனே தண்டைக் காலனே
ஒருநொடியில் வந்திடர் களைந்திடாய்
உத்தமர்தஞ் சித்தத்தில் தித்திக்குந் தெள்ளமுதே
(ஈசனே)

சிவத்திரு யோகர்சுவாமிகள்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் மயிலங்காடு ஒரு பகுதி, புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குருமடைசிட்டி, வயாவிளான், மஸ்கன் வீதி, அச்செழு பிரதேசம், கறுக்காய் பிரதேசம், வாழைத்தோட்டம், விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்டெட் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில பூநகரி நகரம், தம்பிராய், செல்விபரம், தரணி குடியிருப்பு, கடுக்காய்தீவு, பரமங்கிராய, செம்மண்தீவு, கௌதாரிமுனை, பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், தொட்டியடி, புத்தடி ஆகிய இடங்களிலும் வவுனியா பிர தேசத்தில தாண்டிக்குளத்திலிருந்து சின்னவலயன்கட்டு வரை, நொதேர்ண் பாம், ICT பயிற்சிப் பாடசாலை, நீர்ப்பாசன சபை, வரண் அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும்.(இ-9)

# உருக்கி எடுத்துச் செல்லப்பட்ட 5 1/2 கிலோகிராம் தங்கம் மீட்பு

யாழ். குடாநாட்டில் கொள்ளையிடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் தங்க நகைகளை உருக்கி படகின் மூலமாக இந்தியாவிற்கு கடத்த முற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டதுடன் ஐந்தரை கிலோ கிராம் தங்கமும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் 30 ஆம் திகதி இரவு 11.20 மணியளவில் காங்கேசன்துறை உத்தர கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் ரோந்து சென்று கொண்டிருந்த போது தொண்டைமானாறுக்கு வடக்குப் புறமாக உள்ள கடற்பகுதியில் சநதேகத்திற்கிடமான முறையில் படகு ஒன்று நிற்பதனை அவதானித்து அதனை சோதனையிட்டபோது அதற்குள் ஐந்தரை கிலோகிராம் தங்கம் உருக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது தெரியவந்தது.

அப்படகில் இருந்த மாதகல் மற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த ஆண் ஒருவரும்பெண்ஒருவரும்கைது செய்யப்பட்டுள்ளனர்.

உருக்கப்பட்ட நிலையில் இத்தங்கம் மீட்கப்பட்டுள்ளமையால் இது யாழ்.குடாநாட்டு பகுதியில் கொள்ளையிடப்பட்ட தங்கமாக இருக்கலாம் எனப் பொலிஸ் தரப்பினரால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (இ-60)

## சத்திய தரிசனம்



### தெய்வத்துவம் எல்லோருக்கும் உள்ளது

❖ நீங்கள் யாவரும், எப்போதும் பரஸ்பர அன்புடன் ஒருவருக்கொருவர் கருணையுடனும் இரக்கத்துடனும் உதவி செய்து கொண்டு நல்லறத்துடன் கூடிய இல்லற வாழ்க்கை நடத்தி வருபவர்களாகவும் நல்லறிவை வளர்ப்பவர்களாகவும் கஷ்டப்படுவோர்களுக்கு தாமதமின்றி சகாயம் செய்து, உத்தம மனிதர்களாக வாழ வேண்டுமென்பதே சாதுக்களான நல்லோர்களுக்கு நான் சொல்லும் அறிவுரை.

❖ உயிரினங்கள் யாவும் தெய்வத்துவத்திலிருந்து தோன்றி தெய்வத்துவத்திலேயே வாழ்ந்து தெய்வத்துவத்திலேயே இணைந்து விடுகிறது.

❖ ஆக்கல், காத்தல், இணைதல், (ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம்) மூன்றிற்கும் தெய்வத்துவமே காரணம். சங்கல்பம் எனும் எண்ணத்திலிருந்தே மனிதன் பிறந்து, அதனாலேயே வளர்ந்து, அதிலேயே சேர்ந்து விடுகிறான். "யத் பாவம் தத்பவதி" - எப்படி எண்ணுகிறானோ அப்படியே ஆகிறான்.

❖ எண்ணத்திலிருந்து சொல்லும் சொல்லிலிருந்து செய்கையும் வருகிறது. செய்கையின்படியே விளைவும் இருக்கும்.

❖ உத்தமமான எண்ணங்களை வளர்த்து உத்தமமான சொற்களே பேசி உத்தமமான செய்கைகளில் ஈடுபட்டு இலட்சிய வாழ்க்கை வாழ வேண்டும்.

❖ மனிதன் ஆத்ம தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டுமேயன்றி சரீர தர்மத்தைக் கடைப்பிடிக்கலாகாது. இந்திரிய தர்மம் மிருக தர்மம். மனிதன் பின்பற்ற வேண்டியது தெய்வத்துவமே.

❖ இங்கே பிறந்தவர் ஒவ்வொருவருக்கும் தெய்வசக்தி உள்ளது.

❖ மனிதன் தன்னுள் உள்ள தெய்வத்துவத்தை வெளிக்காட்டவே பிறப்பு எடுக்கிறான். மனிதப்பிறவி புனிதமானது. வாழத்தக்கது. இலட்சியத்தை அடைய உத [illegible] என்பதை [illegible] தோன்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அமைக்காவிட்டாலும் பாலத்தினை இந்தியா அமைக்கும் உதய கம்மன்பில எச்சரிக்கை

(கொழும்பு)

இராமர் பாலத்தினை கட்டவேண்டும் என்ற யோசனையை முன்வைத்த ரணில், தற்போது அதனை வேண்டாம் எனக் கூறுகின்றார்.

ஆனாலும் இந்தியா தற்போது இராமர் பாலம் தொடர்பில் ஆர்வம் வெளியிட்டு கொண்டு வருகின்றது. இவ்வாறான நிலை தொடர்ந்தால் இந்தியாவே பாலத்தனை அமைத்துக் கொண்டு இலங்கைக்கு வரும் நிலை ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று கூட்டு எதிர்க்கட்சியினர் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர இதனைக் கூறினார்.

இராமர் பாலம் அமைக்கும் திட்டத்தினை 2003 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசிய கட்சியின்மூலம் முன்வைத்தது ரணிலே ஆனாலும் அப்போது இந்தியா இந்தத் திட்டத்தை எதிர்த்தது. ஆனால் தற்போது இந்தியா இராமர் பாலத்தினை அமைக்க ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில் ரணில் எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றார்.

இவ்வாறான நிலை தொடருமானால் எமது விருப்பம் இருந்தாலும் இல்லாவிடினும் இந்தியா பாலம் அமைத்துக்கொண்டு இலங்கைக்கு வந்து விடும் நிலை ஏற்பட்டு விடும் எனவும் உதய கம்மன்பில சுட்டிக்காட்டினார்.

மேலும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு அரசு பயந்துள்ளது. அதன் காரணமாக தேர்தலை காலம் கடத்தும் முறைகேடான செயலையும் நல்லாட்சி அரசு செய்து வருகின்றது.

இதற்கு காரணம் கேட்கும் போது தற்போது நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்த்து விட்டு தேர்தலை வைக்க வேண்டும் என்றே பதில் கிடைக்கின்றது.

இதன் காரணமாக தேர்தல் காலம் கடத்தப்படுவது எதனால் என முறையாக அரசு வெளிப் படுத்த வேண்டும் எனவும் உதய கம்மன்பில தெரிவித்தார். (செ-11)

# BATTLE OF THE BLUE

# இரட்டைச்சத வெற்றிக்கிண்ணம்

# ஹாட்லியையற்சை வென்றது சென்றல்




இரட்டைச்சத வெற்றிக்கிண்ணத்திற்கான யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் யாழ். நகரிலே துடுப்பாட்ட வரலாற்றிலே முதன்முறையாக விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் 3 ஒரு நாள் தொடரை 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று ஹாட்லி கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்து வைத்தனர். இத்தொடரில் யாழ்.சென்றல் அணியும் ஹாட்லியைற்ஸ் அணியும் கலந்து கொண்டனர். தொடரின் முதல் போட்டியில் யாழ்.சென்றல் அணி ஹாட்லியைற்ஸ் அணியை 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. யாழ். சென்றல் அணி 32.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 207 ஓட்டங்களை பெற்றனர். பாலேந்திரா-22, றஜீவ்-10, சுதர்ஸன்-32, கலிஸ்ரன்-15, சலிஸ்ரன்-50 (இத்தொடரின் முதலாவது அரைச்சதம்) திருக்குமரன் ஆட்டமிழக்காது -29, சுபாதீஸ்-20 ஓட்டங்களை பெற்றனர். இப் போட்டியில் 8 ஆவது விக்கெட் இணைப்பாட்டமும் (சுதர்ஸன், சலிஸ்ரன்) 10 ஆவது விக்கெட் இணைப்பாட்டமும் (திருக்கு மரன் சுபாதீஸ்) அரை சதங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

களத்தடுப்பில் ஹாட்லியைற்ஸ் அணியை சாரீஸ் பிரதீப்-06 (இத்தொடரில் ஆகக்கூடிய இலக்குகள்) சாகித்தியன்-02, சதீஸ்ராம் -01 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 47 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 190 ஓட்டங்களை பெற்றது. சாகித்தியன் -28, புருசோத்மன்-33, நிதர்ஸன்-11, வேனுகன்- 38, அஜித்-28 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பு யாழ். சென்றல் அணியை சார்ந்த சுதர்ஸ்-02, திருக்குமரன் -01, லது-01 சுபாதீஸ், றஜீவ்-03, சலிஸ்ரன்-02 இலக்குகளை கைப்பற்றினர். இப்போட்டியின் சிறந்த வீரராக யாழ். சென்றல் அணியை சார்ந்த B.சலிஸ்ரன் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் 2 ஆவது போட்டி 04.09.16 ஞாயிற்றுக்கிழமையும் 3 ஆவது போட்டி 11.09.16 ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது. தொடரை கைப்பற்றும் அணிக்கு இரட்டைச்சத வெற்றிக்கிண்ணமும் ஒவ்வொரு போட்டியிலும் சிறந்த வீரருக்கான வெற்றிக்கிண்ணமும் தொடரின் சிறந்த நாயகனுக்கான (Man of the series) வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படும். (கு)

# அல்வாய் அறிவருளை வீழ்த்தி

# சம்பியனாகியது மாலுசந்தி மைக்கல்








அல்வாய் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கிரிக்கெட் போட்டியில் அல்வாய் அறிவருள் அணியை வீழ்த்தி சம்பியனாகியது மாலு சந்தி மைக்கல் அணி.

சுவிட்சர்லாந்து, பிரித்தானியா, கனடா ஒன்றியங்கள் இணைந்து நடத்திய அல்வாய் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகள் அண்மையில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் அல்வாய் பாரதிதாசன் விளையாட்டுக்கழகத்தலைவர் கே.கபிலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் அல்வாய் அறிவருள் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதியது.

இப்போட்டியில் அல்வாய் விளையாட்டு விழாவில் கிரிக்கெட் சம்பியன் பட்டத்தை வென்றது மாலு சந்தி மைக்கல் அணி. (கு)

# கிருஸ்ணன் அருமைச்சந்திரன்

# ஞாபகார்த்த விளையாட்டு விழா

அமரர் கிருஸ்ணன் அருமைச்சந்திரனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கலாவாணி சனசமூக நிலையத்தினால் விளையாட்டுக்கள் நடத்தப்படவிருக்கின்றன.

ஆணழகன் போட்டி, ஆண்களுக்கான பாரம் தூக்குதல், இரு பாலாருக்குமான குண்டுபோடுதல், கயிறு இழுத்தல், சங்கீத கதிரை மற்றும் 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் என்பன கலாவாணி முன்றலில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டுக்களில் பங்குபற்ற விரும்புவோர்கள் தங்கள் பெயர்களை கலாவாணி சனசமூக நிலைய நிர்வாகிகளிடம் பதிவு செய்து கொள்ளும்படி போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (கு)




அல்வாய் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான மரதன் ஓட்டம் அண்மையில் நடைபெற்ற போது...

# உடுத்துறை செந்தமிழ் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் மோதியது. மிகவும் விறுவிறுப்பான போட்டியில் 3:1 கோல் கணக்கில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (கு)

# இறுதிப்போட்டியில் ஞானவைரவர்



கல்வியங்காடு GPS விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட 8 ஓவர்கள் சுற்றுப் போட்டியில் காலிறுதியில் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக்கழகத்தை 55 ஓட்டங்களால் வெற்றி கொண்டது அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக் கழகம்.

அணிசார்பாக மக்கலம் (சபேசன்) 67 ஓட்டங்களையும் ஜோய் ரூட் (சுகந்தன்) 5 இலக்குகளையும் கைப்பற்றினர்.

அரையிறுதியில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை 7.3 ஓவர்களுக்கு 4 இலக்குகளால் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது ஞானவைரவர்.

அணி சார்பாக ஜோய் ரூட் (சுகந்தன்) 26 ஓட்டங்களையும் ஆரோன் பின்ச் (சஜீவன்)10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (கு)

# மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

நவிண்டில் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் 21 வயதுக்குட்பட்டோருக்கான மென்பந்து சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட் டுள்ளது.

அணிக்கு 8பேர் 6 ஓவர்கள் கொண்ட போட்டி எதிர்வரும் சனி,ஞாயிறு தினங்களில் பழைய கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும். போட்டி கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படுவதோடு ஒவ்வொரு போட்டியின் முடிவிலும் ஆட்டநாயகன் விருது வழங்கப்படும். போட்டியில் சம்பியன் ஆகும் அணிக்கு வெற்றிக்கிண்ணத்தோடு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 897 6209, 075 076 7674 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சம்பந்தனின் உறுதிமொழி காற்றில் பறந்தது

# பரவிப்பாஞ்சான் மக்கள் மீண்டும் கவனயீர்ப்பு போராட்டத்தில்!



(பரந்தன்)

பரவிப்பாஞ்சானில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் காணிகளையும் இரண்டு வாரத்தில் பெற்றுத் தருவதாக எதிர்க்கட்சி தலைவர் வழங்கிய உறுதிமொழி நிறைவேறாத நிலையில் பரவிப்பாஞ்சான் மக்கள் மீண்டும் தங்களின் கவனயீர்ப்பு போராட்டத்தை நேற்று புதன்கிழமை இரவு முதல் ஆரம்பித்துள்ளனர்

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாதுகாப்புத் தரப்பினரால் சுவீகரிக்கப்பட்டிருந்த தமது காணிகளை மீள ஒப்படைக்குமாறு வலியுறுத்தி பிரதேச மக்கள் கடந்த சில வாரங்களாக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இதனையடுத்து, கடந்த 17 ஆம் திகதி அந்த பகுதிக்கு விஜயம் செய்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், பாதுகாப்பு செயலாளருடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டதை அடுத்து, இரண்டு வாரங்களுக்குள் மக்களின் காணிகளை மீளப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதியளித்திருந்தார்.

இதனையடுத்து, ஐந்து நாட்களாக தொடர்ந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக்கள், தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் வாக்குறுதியளித்தவாறு 14 நாட்கள் கால வரையறை நேற்று புதன்கிழமை 31ஆம் திகதி உடன் நிறைவடையும் நிலையில், பரவிப்பாஞ்சானில் சுமார் மூன்றரை ஏக்கர் காணி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்ளாத பரவிப்பாஞ்சான் மக்கள் தங்களுடைய அனைத்து காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரி மீண்டும் தங்களுடைய கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

எதிர்க்கட்சி தலைவர் அளித்த வாக்குறுதியின்படி நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறவில்லை என்றும் படைத்தரப்பு ஏற்கெனவே தீர்மானித்ததன்படி மூன்றரை ஏக்கர் காணியை மட்டுமே விடுவித்துள்ளது. அதுவும் பொது மக்களிடம் இன்னும் கையளிக்கப்படவில்லை அரச அதிபரிடமே ஒப்படைத்துள்ளது.

சம்பந்தன் ஐயாவின் உறுதிமொழியை நம்பி நாம் எமது போராட்டத்தை கைவிட்டிருந்தோம். ஆனால் அவர் கூறியபடி எதுவும் இடம்பெறவில்லை. எனவே நாம் எமது தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளோம் என பரவிப்பாஞ்சான் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு 15 குடும்பங்களுக்கு சொந்தமான இன்னும் பத்து ஏக்கர் காணிகளை வடுவிக்க வேண்டும். எனவே அந்தக் காணிகளும் விடுவிக்கும் வரை நாம் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ளதாக பரவிப்பாஞ்சா னில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (செ-312)

## கொழும்பை...

கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்துள்ளார்.

அலரி மாளிகையில் இருவருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

முன்னதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இரவு கொழும்புக்கு விஜயம் செய்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரிகள் சகிதம் அங்கு சென்றுள்ள ஐ.நா செயலாளர் நாயகம், இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராய்வார் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. எனினும் இந்த விஜயத்தில் தமக்கு எந்தவித அழுத்தங்களும் ஏற்படப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நேற்று இரவு 7.30 மணி அளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனை, பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா வரவேற்றுள்ளார்.

இலங்கையில் மூன்று தினங்கள் தங்கியிருக்கும் ஐ.நா செயலாளர் நாயகம் ஐ.நாவின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்படவுள்ள சமாதானத்தை கட்டியெழுப்பவதற்கான நிதியம் குறித்தும் ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் விரிவாக ஆராய்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை நேற்றிரவு பிரதமர் ரணிலை சந்தித்த பான் கீ மூன் யாழ்ப்பாணம் மற்றும் காலி ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருடனும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

இந்த சந்திப்புக்களில் பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் ஆராய்வார் என கூறப்பட்டுள்ளது. இதேவேளை, லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகள் நிலையத்தில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றிலும் பான் கீ மூன் உரையாற்றவுள்ளார். (செ-11)

## இராணுவத்...

ணுவத்தின் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ஜயநாத் ஜயவீர நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

ஜயநாத் ஜயவீர தொடர்ந்து கூறுகையில்,

வடக்கில் இராணுவ முகாம்கள் சில காரணங்களுக்காகவே அமைக்கப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பினை கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களுக்கு தேவையான இடத்தின் அளவு குறித்த வரையறை காணப்படுகின்றது.

ஆகவே இராணுவ முகாமிற்கு தேவையற்ற மேலதிகமான அனைத்து காணிகளையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும் எந்தெந்த இடங்கள் விடுவிக்கப்படுமென எங்களால் கூறமுடியாது. காரணம் பொதுமக்களின் வேண்டுகோளை கருத்திற்கொண்டு அது தொடர்பில் ஆராய்ந்து தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் காணப்படாத காணிகளை விடுவிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். நீங்கள் குறிப்பிடும் காணி தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்த பிரதேசத்திற்கு பொறுப்பான படையணியின் அதிகாரிகளுடன் கலந்துரையாட வேண்டும்.

தற்போது காணப்படும் சமாதான சூழலையும் கருத்திற் கொண்டு, புலனாய்வாளர்களின் அறிக்கைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தி பொது மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் தென்பகுதியிலும் இராணுவ முகாம்கள் காணப்படுகின்றன. வடக்கிலும் இராணுவ முகாம்கள் காணப்படுகின்றன. பாதுகாப்பு தேவை கருதி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே அவைகள் அமைக்கப்பட்டுள்ளன.

காணிகளை விடுப்பது தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆகவே எந்தெந்த காணிகளை விடுவிப்பது என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை. ஆகவே தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லாத வகையில் அதனை உறுதிப்படுத்திக்கொண்டு. காணிகளை விடுவிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம்.

எனினும் தேசிய பாதுகாப்பு கருதி சில காணிகளை இராணுவத்தினர் தொடர்ந்தும் பேண வேண்டிய சூழல் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வலி வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள பொது மக்களின் காணிகளில் இராணுவத்தின் தேவைக்குரிய காணிகளை விடுவிக்க முடியாது என யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மகேஷ் சேனநாயக்க முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## எந்த அழுத்தத்தையும்...

ராஜித சேனாரத்ன தொடர்ந்து கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் 2009ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்தவுடன் இணைந்து கூட்டு உடன்படிக்கையொன்றையும் வெளியிட்டார்.

எனினும் அதிலுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பது பற்றி ஆராய தற்போது அவர் வரவில்லை. நல்லிணக்க நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஆராயும் நோக்கிலேயே அவரது பயணம் அமைந்துள்ளது.

ஐ.நா. செயலாளருடன் இணைந்து மகிந்த வெளியிட்ட அறிக்கையின் பிரகாரமே தாருஸ்மன் குழு அமைக்கப்பட்டது. ஆகவே, எது பாரதூரம் என்பதை இதன்மூலம் புரிந்துகொள்ள முடியும். முன்னைய ஆட்சியில் நீதித்துறைக்கு அச்சுறுத்தல் இருந்தது.

ஆனால், இன்று அந்தநிலை மாறியுள்ளது. எனவே, இலங்கையின் நீதித்துறை, அதன் கட்டமைப்பு மீது சர்வதேச சமூகமும், ஐ.நாவும் நம்பிக்கை வைத்துள்ளன.

அண்மையில், ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், பொறுப்புகூறல் பொறிமுறைக்கு சர்வதேசத்தின் பங்களிப்பு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு ஐ.நா. செயலாளர் பதிலளிக்கவில்லை. எனவே, பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற அழுத்தம் எதுவும் கிடையாது. உள்ளக நீதிக்கட்டமைப்பை ஐ.நா செயலாளரும் நம்புகிறார். நல்லிணக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது என்பதை முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

அவர்களுக்கு நாட்டின் நீதித்துறை மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அன்று அவ்வாறான நிலை காணப்படவில்லை. வெளிநாட்டு நீதிபதிகளின் பங்குபற்றல் அவசியம் என்ற அச்சுறுத்தல் அன்று காணப்பட்டது. எனினும் தற்போது அது தொடர்பில் யாரும் அழுத்தம் கொடுப்பதில்லை. அது தொடர்பில் கோரிக்கை விடுத்த பலர் இன்று அமைதியாகவுள்ளனர். காரணம் அந்த செயற்பாடுகள் சுதந்திரமாக முன்னெடுக்கப்படுகின்றது என்ற நம்பிக்கை அவர்களுக்கு காணப்படுகின்றது என ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த இராணுவப் பேச்சாளரிடம், ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொள்ளவுள்ள விஜயத்தினால் இலங்கை இராணுவத்திற்கு அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகள் ஏற்படலாமா என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த இராணுவப் பேச்சாளரான மேஜர் ஜெனரல் ஜயநாத் ஜயவீர அவ்வாறு எந்த நெருக்கடிகளும் ஏற்படப் போவதில்லை என்று கூறியதுடன், தமிழ் மக்கள் இராணுவத்திற்கு எதிராக எந்தவித முறைப்பாடுகளையும் முன்வைக்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் தமிழ் மக்கள் தொடர்பில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. அரசாங்கம் முன்னெடுக்கும் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் தமிழ் மக்கள் பான் கீ மூனுக்கு தெளிவுபடுத்துவார்கள். அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை அவர்கள் முன்வைக்க மாட்டார்கள் எனவும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார். (செ-11)

## மண்டைதீவு திருவெண்காட்டில் 4ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம்

### கோபுரத் திருக்கதவு திறக்க யானை வருகிறது

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காட்டு சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன-பஞ்சதள இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 07.04 மணி முதல் காலை 8.58 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறும் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, நாளை 2ஆம் திகதி பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 3ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு நடைபெற்று மறுநாள் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

புனராவர்த்தன நவகுண்ட மஹா கும்பாபிஷேகத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுரத்திற்கான கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

இதனையொட்டி கண்டியிலிருந்து யானை வரவழைக்கப்பட்டு கோபுரத் திருக்கதவு திறந்து வைக்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கைது செய்யப்பட்ட...

னாள் போராளி வவுனியா நீதிமன்றில் நேற்று புதன்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி தொண்டமான் நகர் பகுதியில் முன்னாள் போராளி ஒருவர் வெள்ளை வானில் சென்றவர்களால் அழைத்துச் செல்லப்பட்டார் என அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறிகண்டி அறிவியல்நகர் பகுதியைச் சேர்ந்த மனோகரசீலன் நிஷாந்தன் (வயது - 26) என்பரே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இனந்தெரியாதோரால் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்நிலையில். அவர் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (செ-11)

## பிரதமர் இன்று...

இவ்வாறு பயணம் செய்யவுள்ளார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின பாதுகாப்பு மற்றும் செழிப்புத் தொடர்பாக ஆராயும் இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார்.

சிங்கப்பூரில் உள்ள சங்கிரி லா நட்சத்திர விடுதியில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில். இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ். மலேசியாவின் பிரதிப் பிரதமர் உள்ளிட்ட இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளின் தலைவர்களும். பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கோத்தாவுக்கு எதி...

வனத்தின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பாகவே கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவன்ட் கார்ட் பாதுகாப்பு நிறுவனத்திற்குச் சொந்தமான மிதக்கும் ஆயுதக் களஞ்சிய கப்பல் காலி துறைமுகத்தில் செயற்பட்டிருந்த போது அரசாங்கத்திற்கு சுமார் 11.4 பில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையிலேயே கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் மேஜர் நிசங்க சேனாதிபதி உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவன்ட் கார்ட் பாதுகாப்பு நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி கோத்தபாய ராஜபக்ஷ இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தமிழ் கைதியை...

முன்னாள் ராணுவ லெப்டினலுக்கு எதிராக நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியது.

அரசு தரப்பின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில கருத்து தெரிவித்த போது 1998-ஆம் ஆண்டு யாழ்.பருத்தித்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரொபட் வோலிண்டன் எனும் கைதி தப்பியோட முயற்சித்த போது சந்தேக நபர் கவனக்குறைவான முறையில் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டின் காரணமாக அந்த கைதி மரணமடைந்துள்ளதாக அறிவித்தார்.

ஆனால். இந்த குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக தெரிவித்த எதிர் தரப்பின் வழக்கறிஞர் சந்தேக நபரை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். தீர்ப்பை அறிவித்த நீதிபதி சந்தேக நபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

இதன்படி சந்தேக நபருக்கு பத்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு ஆண்டு சிறை தண்டனை வழங்கிய நீதிபதி, இறந்த கைதியின் உறவினர்களுக்கு 20 லட்சம் ரூபாய் இழப்பீட்டை பெற்றுக் கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய உள்ளதாக சந்தேக நபர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தார். (செ-11)

## குரல்தரவல்ல அதி...

பயிற்சி ஒன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில். அந்தப் பதவிக்கு பிரிகேடியர் றொசான் செனிவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள படைத் தலைமையகம், இந்த நியமனம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

படைத்துறை அமைச்சில் பிரதி இணைப்பு அதிகாரியாக பணியாற்றிய இவர். படைத்தரப்பின் கவச படைப்பிரிவில் 30 ஆண்டுகள் பணியாற்றியிருந்தார்.

அத்துடன், படைத்தரப்பின் யாழ். அதிரடிப படைத் தலைமையகம். காலாட்படைப் பிரிவுகள் மற்றும் றெஜிமென்ட்களில் இவர் முக்கியமான பதவிகளை வகித்திருந்தார். (செ-11)

## அலைகடலென...

வரலாற்றுப் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நேற்றைய தினம் அலைகடலென திரண்ட இலட்சக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக நடைபெற்றது.

அதிகாலை 5.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை நடைபெற்று, மங்கள வாத்தியங்களுடன் ஆலய உள்வீதி வலம் வந்து 7.15 மணிக்கு நல்லைக்கந்தன் வள்ளி தெய்வானை சமேதராய் திருத்தேரில் எழுந்தருளினார்.

நல்லைக்கந்தனின் திருத்தேரை இழுத்து தமது வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்காக உலகளாவிய ரீதியிலிருந்து பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர். திருத்தேர் காலை 9.40 இற்கு இருப்பிடத்தை வந்தடைந்ததும் பச்சைசாத்தி சுவாமியை ஆலயத்துக்குள் எழுந்தருளச் செய்ததுடன், பிராயச்சித்த அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூஜைகளும் நடைபெற்றன.

இதேவேளை பக்தர்கள் போன்று வேஷமிட்டு திருடர்களின் கைவரிசைகளும் இடம்பெறலாம் என்பதனால் 700ற்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். குறிப்பாக பெண் பக்தர்களின் பாதுகாப்புக்காக பெண் பொலிஸ் அதிகாரிகள் கூடுதலாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அநுராதபுரம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து மேலதிக பெண் பொலிஸார் விசேடமாக வரவழைக்கப்பட்டிருந்தனர்.

தெல்லிப்பளை பொலிஸாரும் நல்லூர் கோவில் வளாகத்தில் மேலதிக பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுமிருந்தனர். பக்தர்களுடன் பக்தர்களாக சிவில் உடையிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையை காணமுடிந்தது.

மேலும் திருடர்களைப் பிடிப்பதற்காக கோவில் வளாகத்தில் பல இடங்களில் சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தப்பட்டு. யாழ் மாநகர சபையினரும். பொலிஸாரும் இணைந்து இதனைக் கண்காணித்தனர். திருட்டுக்களைத் தவிர்ப்பதற்கு தங்க நகைகளை அணிவதைத் தவிர்க்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்திருந்ததுடன், காலாசார உடைகளை அணிந்து வருமாறு பக்தர்களிடம் யாழ் மாநகரசபை கோரிக்கை விடுத்திருந்தது, இதனை பல பக்கதர்களும் ஏற்று கடைப்பிடித்ததனை காண முடிந்தது.

இலட்சக்கணக்கான பக்தர்களுக்கான குடிநீர் வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை யாழ் மாநகரசபை மேற்கொண்டிருந்ததாக ஆணையாளர் கே.வாகீசன் தெரிவித்தார். வெளிவீதியில் பல்வேறு இடங்களில் குடிநீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டிருப்பதுடன், நீர் முடிந்தவுடன் பவுசர்கள் மூலம் நீர் நிரப்புவதற்கான ஏற்பாடுகளும் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தேர்த்திருவிழாவை முன்னிட்டு யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து விசேட பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததனையும் காணமுடிந்தது. தனியார் மற்றும் போக்குவரத்து சபையின் விசேட பஸ் சேவைகளும் ஏற்பாடாகியிருந்தன. தேர்த்திருவிழா நடைபெறும் நேரத்தில் வெளி ஊர்களிலிருந்து ஆலயத்தை நோக்கிவரும் காவடிகள் மற்றும் பறவைக் காவடிகள் உள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்ததுடன், தேர் இருப்பிடத்திற்கு வந்து சுவாமி ஆலயத்தை சென்றடைந்ததும் காவடிகள் ஆலய வளாகத்துக்குள் நுழைவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இன்றைய தினம் 25ஆவது திருவிழாவாக தீரதத உற்சவம் நடைபெறவுள்ளது. காலை 7 மணிக்கு உள்வீதியிலுள்ள தீர்த்தக் கேணியில் தீர்த்தத் திருவிழா நடைபெறும். நாளைய தினம் மாலை பூங்காவனத் திருவிழா நடைபெறும். அதேநேரம். வைரவர் மடையுடன் நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் நிறைவுபெறும். தேர்த்திருவிழாவை முன்னிட்டு, தெற்கிலிருந்து வருகைதரும் பக்தர்களுக்காக, யாழ் செல்லும் ரயில்களில் குளிரூட்டப்பட்ட மூன்று பெட்டிகளும் மேலதிகமாக இணைக்கப்பட்டிருந்தது. இந்தசேவை இன்றும் நடத்தப்படவுள்ளது.

கல்கிஸை ரயில் நிலையத்திலிருந்து காங்கேசன்துறை ரயில் நிலையம் வரை நாளாந்தம் பயண்க்கும் நகரங்களுக்கிடையிலான இன்டர்சிட்டி, எக்ஸ்பிரஸ் ரயிலில் முதலாம் வகுப்பில் குளிரூட்டப்பட்ட 3 பெட்டிகள் இணைக்கப்பட்டிருந்தன.

அதேபோல. காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து கல்கிஸை ரயில் நிலையம் வரையிலும் நாளாந்தம் பயணிக்கும் இன்டர்சிட்டி, எக்ஸ்பிரஸ் ஆகிய ரயில்களில், முதலாம் வகுப்பில் குளிரூட்டப்பட்ட 3 பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. (செ-4)

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Telecommunication & Digital Infrastructure
MPCS Building, 127,K.K.S.Road, Jaffna,Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது
SEPTEMBER BATCHES
Dip.in Microsoft Office
Dip.in Desktop publishing
Dip,in Information Technology
Dip,in Computer Programming
Online Course
Dip.in PC Application & Office Management
Languages
VB.net
PHP
C Sharp
Java
Workshops
Internet & e-mail
Webpage Designing & Development
Special Workshop Class
Internet Technology - (40 hours)
விண்ணப்ப படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்தகிற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 09.09.2016
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 10.09.2016
CENTRE FOR INFORMATION TECHNOLOGY
Executive Officer
(C-5555)

நாளை மாலை
நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு CEYLON ART CREATION
K.T பிரசாத் பெருமையுடன் வழங்கும் தென் இந்திய விஜய் தொலைக்காட்சி கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும் மாபெரும் இசைநிகழ்ச்சி




02.09.2016 வெள்ளிக்கிழமை
இரவு 7.00 மணிக்கு
இடம்: நல்லூர் சங்கிலியன் பூங்கா திறந்த வெளியரங்கு
அனுமதி இலவசம்
ஏற்பாட்டுக்குழு
Ceylon Art Creation
077 550 4910
077 480 3020
Sponsored By:
NSB National Savings Bank
NCB
KAJAMUGAN HARDWARE
IDM
SPMC
RAMCO cement
Sponsored by ANDRA
Leading Printers in JAFFNA
021 221 7279 / 077 6622981
(5787)

V2 TRAVELS
11/09/2016 ஞாயிற்றுக்கிழமை
பருத்தித்துறை திறப்புவிழாவில் பணப்பரிசு
நீங்கள்
ரூபா 1000/= பணப்பரிசு
வெளிநாட்டுக்கு பார்சல் அனுப்பப்போறீங்களா?
விமானப்பயணச்சீட்டு எடுக்கப்போறீங்களா?
UK - 550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
முற்பதிவு ஆரம்பமாகி விட்டது
முற்பதிவுகளுக்கு - 0768226240

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
வடமராட்சி மாணவர்களின் நன்மை கருதி
சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வகுப்புக்கள்
ஆரம்பம் :- 04.09.2016 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 - 12.30
பொது உளச்சார்பு, பொது அறிவு
ஆசிரியர் சேவைக்கான வகுப்புக்கள்
ஆரம்பம் :- 03.09.2016 சனிக்கிழமை
காலை 8.30 - 12.30
பொது உளச்சார்பு, பொது அறிவு
யாழ் மற்றும் வடமராட்சி பிரபல ஆசிரியர்களினால் இவ்வகுப்புக்கள் எதிர்பார்க்கை வினாக்களை தழுவிய வகையில் கையேடுகள் வழங்கப்பட்டு வினைத்திறனாக நடத்தப்படும்.
உயர்கல்லூரி
NSB வங்கியின் மேல்மாடி
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
T.P No :- 077 876 0992
077 344 3962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.